சம்பந்தர் பிள்ளைத்தமிழ்

பதிப்பு
ப. திருஞானசம்பந்தம்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
ஜூலை - 2005

சம்பந்தர் பிள்ளைத்தமிழ்

- - தாள் சுவடி

சுவடியியல் மற்றும் பதிப்பியல் நிறைசான்றிதழுக்காக
(Diploma) சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிவேடு

பதிப்பு

ப. திருஞானசம்பந்தம்

நெறியாளர்

வீ. அரசு

பேராசிரியர் - தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
ஜூலை - 2005

நெறியாளர் சான்றிதழ்

பேராசிரியர் வீ. அரசு,
துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைசான்றிதழுக்கான பதிப்பேட்டை செல்வன் **ப. திருஞானசம்பந்தம்** அவர்கள் என் மேற்பார்வையில் தாள் சுவடியிலிருந்து **'சம்பந்தர் பிள்ளைத்தமிழ்'** என்னும் பதிப்பேட்டை உருவாக்கியுள்ளார். இப்பதிப்பேடு அவரின் சொந்த முயற்சியில் உருவானது என்று சான்றளிக்கிறேன்.

நெறியாளர்,

(பேராசிரியர் வீ. அரசு)

நாள் : 27-07-2005
இடம் : சென்னை-5

பதிப்பாளர் உறுதிமொழி

ப. திருஞானசம்பந்தம்
முதுகலைத் தமிழ்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' நிறைச்சான்றிதழுக்கான **'சம்பந்தர் பிள்ளைத்தமிழ்'** என்னும் தாள் சுவடி பதிப்பேடு என் சொந்த முயற்சியால் உருவானதாகும். இப்பதிப்பேடு இதற்குமுன் வேறு எந்த பட்டத்திற்கும், ஆய்வரங்கிற்கும் அளிக்கவில்லை என்று உறுதி அளிக்கிறேன்.

பதிப்பாளர்

(ப. திருஞானசம்பந்தம்)

நாள் : 27-07-2005
இடம் : சென்னை-5

என் தாத்தா

வடிவேல் பிள்ளை

அவர்களுக்கு

உள்ளடக்கம்

நன்றியுரை I

முகவுரை IV

சம்பந்தர் பிள்ளைத்தமிழ்

காப்புப் பருவம் 1

செங்கீரைப் பருவம் 6

தாலப் பருவம் 11

சப்பாணிப் பருவம் 15

முத்தப் பருவம் 20

வாரானைப் பருவம் 24

அம்புலிப் பருவம் 30

சிற்றில் 35

சிறுபறை 38

சிறுத்தேர் 40

பின்னிணைப்பு

துணை நூற் பட்டியல் 46

செய்யுள் அகரவரிசை 47

அருஞ்சொற் பொருள் விளக்கம் 50

பிள்ளைத் தமிழ் பற்றிய நூற்பாக்கள்

நிகண்டுகளும் பாட்டியல்களும் 52

தாள் சுவடி நகல்

நன்றியுரை

என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையரான மணிவாசகி-பரமசிவம் அவர்களுக்கும், எனது அறிவுக் கண்ணை திறந்து, பயில்வதற்கு வழிகாட்டியாக விளங்கிய தாத்தா வடிவேல் பிள்ளை (ஓய்வு பெற்ற தமிழாசிரியர்) அவர்களுக்கும், பாட்டி, மாமா, அக்கா, அண்ணன், அண்ணி, தம்பிகள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையால் நடத்தப்பெறும் சுவடியியல் மற்றும் பதிப்பியல் என்னும் பட்டயப் படிப்பில் பயில்வதற்கு வாய்ப்பளித்தும், சுவடியோடு நேரடியாக வாசிக்கவும், எழுத்து முறைமைகளை கற்கவும் வழி வகுத்தது, சுவடியை பதிப்பிக்கும் முறைமைகளையும், சுவடியைப் பதிப்பிப்பதற்கு வழிகாட்டியாக இருந்த மதிப்பிற்குரிய பேராசிரியர் **வீ.** அரசு அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாள்சுவடியை பதிப்பிப்பதற்கு உரிமை வழங்கிய கீழ்த்திசை சுவடி நூலக பொறுப்பாளர் **திரு. சௌந்தரப்பாண்டியன்** அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. தாள்சுவடியைக் கொடுத்துதவிய நண்பர் **கோவிந்தனுக்கும்** நன்றி. சுவடி வகுப்பில் சுவடியோடு அணுகவும், எழுதவும் பயிற்சியளித்து, ஐயங்களை தெளிவுபடுத்திய முனைவர் **ய. மணிகண்டன்** அவர்களுக்கும், பல்வேறு

வகைகளிலும் துணை நின்று வருகின்ற எங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் **கோ. பழனி,** முனைவர் **ஆ. ஏகாம்பரம்** அவர்களுக்கும் நன்றி. சிறப்பு வகுப்புகளில் பிறதுறை சுவடியை அறிமுகப்படுத்திய முனைவர் **கி. ஜெயக்குமார்** அவர்களுக்கும், கிரந்த எழுத்துக்களை அறிமுகப்படுத்திய பேராசிரியர் **சீனிவாசன்** அவர்களுக்கும், சுவடி இறுதிக் குறிப்பை விளக்கிய முனைவர் **சூ. நிர்மலாதேவி** அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல நிலைகளிலும் உதவி புரிந்த **கு. அமர்நீதி, ஏ. கோதண்டராமன்** மற்றும் அறை நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனிவான முறையில் கணிப்பொறி வரைகலைகளையும் அச்சுப் பணியையும் சிறப்பான முறையில் பயன்படுத்தி நூலினை வடிவமைத்த திருமதி **பேபி இராஜேந்திரன்** அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகவுரை

பிள்ளைத்தமிழ் என்பது தொண்ணூற்றாறு வகைத் தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று. இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இருவகைப்படும். பிள்ளைத்தமிழ் பத்து பருவங்களை கொண்டது.

பருவத்திற்குப் பத்துப்பாடல்கள் வீதம் பத்துப் பருவத்துக்கு 100 பாக்களாக விருத்த இலக்கணத்திற் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் நூல். பாட்டுடைத் தலைவனாக ஒரு தெய்வத்தையோ, அரசனையோ, மக்களையோ, மகானையோ, வள்ளலையோ குறுநிலத் தலைவர்களையோ, புலவரையோ கொள்ளுதல் மரபு.

சமய அடிப்படையில் சைவம், வைணம், சமணம், கிறித்துவம், இசுலாம் சார்ந்து பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றியுள்ளன. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரியது. காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, அம்மானை நீராடல், பொன்னூசல் என்னும் பத்து பருவங்களும் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு உரியன.

காப்பு : குழந்தை பிறந்த மூன்றாம் மாதத்தில் அக் குழந்தையைக் காக்கும்படி கடவுள் அருளை வேண்டுவது.

செங்கீரை : ஐந்தாம் மாதத்தில் குழந்தை மழலை மொழிகளைப்பேசும், மேலும் ஒருகாலை மடக்கி, ஒரு காலை நீட்டி இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித்தலை நிமிர்ந்து முகத்தை அசைத்து ஆடும். இளங்கீரைத் தண்டின் நுனி ஆடுவதுபோல் குழந்தையும் தலையை ஆட்டுதலினாலும் செங்கீரை எனப்பட்டது.

தால் : தாய் சேயைத் தொட்டிலில் இட்டுக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து பாடலைப் பாடி ஆட்டும் பருவம். ஏழாம் மாதத்தில் நிகழ்வது. நாவசைத்துப் பாடுதலின் இப்பருவம் தாலப் பருவம். குழந்தை நாவை அசைத்துப் பேசத் தொடங்கும் பருவம்.

சப்பாணி : இருகைகளையும் கூட்டிச் சேர்த்துக் கொட்டிக் குழந்தை மகிழும் பருவம். ஒன்பதாம் மாதத்தில் நிகழ்வது.

வருகை : தளர்நடையிட்டு நடக்கத் தொடங்கிய குழந்தையை வருக வருக என்றழைப்பது. வருகைப்பருவாம். இதற்குரிய காலம் 12ஆம் மாதமாம்.

அம்புலி : பாட்டுடைத் தலைவனுடன் விளையாட வரும்படிச் சந்திரனை அழைப்பது 18-ஆம் மாதம் இதற்குரிய காலம். அம்புலியை அழைக்கும்போது சந்திரனையும் குழந்தை யையும் ஒப்புமை கூறுதல் சமம். சந்திரனின் குறைகளைக் கூறிக் குழந்தையின் மேன் மையை உரைப்பது பேதம். குழந்தையுடன் விளையாட வருவதனால் அம்புலி பெறும் பயனைக் கூறுவது தானம். விளையாட வராவிடில் வரும் தண்டனையை உரைப்பது தண்டம்.

சிற்றில் : சிறுபெண்கள் மணலில் சிறுவீடுகள் கட்டி விளையாடும்போது தாம் முயன்று கட்டிய மணல்வீடுகளைச் சிதைக்க வேண்டாம் என்று பாட்டுடைத் தலைவனை வேண்டு வது சிற்றிற் பருவமாம். இது இரண்டாம் ஆண்டில் நிகழ்வது.

(ஜீவாத்மாவாம் பெண்ணின் சிற்றிலாகிய உடம்பைச் சிதைக்காமல் மரணத்துக்கு

உள்ளாக்காமல் காத்தருளுமாறு இறைவனை வேண்டுதல் என்பது தத்துவம்.)

சிறுபறை : சிறுபறை - கொட்டிக் குழந்தை விளையாடும் பருவம். மூன்றாம் ஆண்டு இதற்குரிய காலம்.

சிறுதேர் : சிறியதேரை உருட்டி விளையாடும்படிக் குழந்தையைத் தாய்மார் வேண்டும்பருவம். நான்காம் ஆண்டில் நிகழ்வது.

நீராடல் : இதனை 'பனிநீர் தோய்தல்' என்பர். இப்பெயர் நீரின் குளிர்ச்சியையும் நீராடும் நளினத்தையும் அதனால் கிட்டும் இன்பத் தையும் துய்த்து ஆரா இன்பம் கண்டோர் பனிநீர் தோய்தல் எனப்பெயரிட்டனர். இருபாலருக்கும் பொதுவானது.

ஊசல் : மகளிர் ஊசலாடுவதை குறிப்பது. கலம் பகத்து உறுப்புகளில் ஊசல் ஒன்று. திருக் கோயில் திருவிழாக்களில் ஊசல் விழாவும் நடைபெறும்.

அம்மானை : கழங்காடுதலை குறிப்பது. பெண்கள் கூடி அம்மானைப் பாடி கழங்காடுவர்.

பிள்ளைத்தமிழ் முன்னோடிகளாக ஆழ்வார்களை கருதலாம். பிள்ளைத்தமிழ் தனி இலக்கியவகையாக உருப்பெறும் முன் ஆழ்வார்கள் பலர் அதற்குரிய பருவங் களைப் பாடியுள்ளனர். திருமங்கையாழ்வார், குலசேகராழ் வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகிய நால்வரும் பாடிய திருமொழிகளால் அறியும் அமைப்பு பிள்ளைத்தமிழ் அமைப்புடன் ஒப்பிடற்குரியது.

திருமங்கையாழ்வார் இன்னமுதூட்டலையும் (1878-1887) சப்பாணிப்பருவத்தையும் (1888-1897) ஒன்றன்பின் ஒன்றாகப் பாடினர். குலசேகரர் தாலப் பருவமாக (719-729) ஒரு பருவம் பாடியுள்ளார், அவர் மற்றொரு திருமொழியில் தேவகியாகத் தன்னை ஆக்கிக் கொண்டு யசோதை துய்த்த பிள்ளைமை இன்பங்களைத் தான்

துய்க்கவில்லையே என வருந்துவாகப் பாடினார். அங்கு முதல்பாட்டு தாலப்பருவம் (708) ஐந்தாம் பாட்டு முத்தப்பருவம் (712) ஏழாம் பாட்டு இன்னமுதூட்டல் பருவம் (714) எனத் தாலும் முத்தமும் இன்னமுதூட்ட லும் எனப் பருவங்கள் வரிசையாக விளங்குகின்றன.

இவ்விருவரிலும் பெரியாழ்வார் விரிவாகப் பிள்ளைத்தமிழுக்குரிய பல கூறுகள் அமையப் பாக்கள் பாடியுள்ளார் ஆண்டாள். அவர் பாடாத சிற்றில் சிதையேல் (514-523) என்ற பருவத்தைத் தனித்துப் பாடினார். குழந்தை விளையாட்டுகளைத் தம்பாக்களில் நன்கு சித்தரிக்கிறார். பெரியாழ்வார் பாடிய காப்பு, தாலாட்டு, அம்புலி, செங்கீரை, சப்பாணி ஆகியன நிகண்டுகளிலும், பாட்டியல்களிலும் பிள்ளைத் தமிழுக்குரியவையாக விளங்குபவை.

பிள்ளைத் தமிழ் இலக்கணத்தை முதல் நிகண்டான திவாகரமும் பின் எழுந்த பிங்கலம், பாரதிதீபம், சூடா மணி ஆகிய நிகண்டுகளும் இயம்புகின்றன. பாட்டியல் நூல்களான பன்னிரு பாட்டியலின் 25 நூற்பாக்கள் பிள்ளைத் தமிழ் பற்றியவை. வெண்பாப் பாட்டியலின் கண்ணும் பிள்ளைத் தமிழுக்குரிய பத்து பருவங்கள் உறுதிப் படுத்தப் படுகிறது. நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் போன்ற பாட்டியல் நூல்களும் பிள்ளைத்தமிழ் பருவங்களைச் சுட்டியுள்ளன.

கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் முதல் நூல். அதன்பின் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரை சொக்கநாதர் பிள்ளைத்தமிழ் எனபல பிள்ளைத்தமிழ் நூல்கள் தோன்றின.

ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் எந்நூலினும் பத்துக்குக் குறைந்த பருவங்கள் இல்லை. பத்துக்கு மிகுதியான பருவநூல்கள் இருபதாம் நூற்றாண்டில் மூன்று தோன்றின. அவை பெரியார் பிள்ளைத்தமிழ்,

களவை முருகன் பிள்ளைத்தமிழ் ஈழத்துத் திருக்கதிர் காமப் பிள்ளைத்தமிழும் ஆகும்.

புதுமைப்பிள்ளைத் தமிழ்கள் என்னும் தலைப்பில், சில பிள்ளைத்தமிழ் நூல்களைக் குறிப்பிட்டு அவற்றின் புதுமையைப் புலப்படுத்துகிறது. பெரியோர்களைக் குழந்தையாகக் கருதிப் பாடுவதே பிள்ளைத்தமிழ் மரபு. ஆனால் கதிரேசன் பிள்ளைக்கவி, இளங்கோவன் பிள்ளைக்கவி, இரண்டும் பிள்ளைகளையே பாடியுள்ளன. இது பாடுபொருளில் ஒரு புதுமை.

குப்பன் பிள்ளைத் தமிழ் என்பது வறுமையின் பிடியில் சிக்கித்துயருழக்கும் பல்லாயிரம் ஏழை எளியவர்களின் சார்பாளனாகப் படைக்கப்பட்ட கற்பனைப் பாத்திரத்தின் மேல் பாடப்பெற்றது. அங்கதச் சுவை மலிந்தது. வறுமையின் கொடுமையைச் சித்தரிப்பது. ஆனால் இந்நூல் தமிழக வரலாற்றில் எந்தபாதிப்பையும் உண்டாக்க வில்லை.

புதுமை என்றபெயரில் ஒரு சாதியைப் பற்றிச் செங்குந்தர் மரபினர் குறித்து ஞானப்பிரகாச முனிவர் செங்குந்தர் பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார்.

கவிஞர் நாராநாச்சியப்பன் இயற்றிய பிள்ளைத் தமிழ் நூல் ஆணையோ பெண்ணையோ தனித்த முறையில் பாடாமல் இருபால்களையும் கலந்து பாடிய தாகும். பருவத்துக்கு 3 பாடலாக 13 பருவம் கொண்டது. ஆக இந்நூலில் 39 பாடல்கள் உள்ளன. பாடுபொருள் பருவ எண்ணிக்கை பருவத்தின்பாடல் எண்ணிக்கை இவற்றில் எல்லாம் புதுமையுடையதே இந்நூல்.

பகழிக்கூத்தர் இயற்றிய திருசெந்தூர்ப் பிள்ளைத்தமிழ் தமிழில் தோன்றிய பிள்ளைத்தமிழ் நூல்களில் இதற்கு ஒப்பதும் மிக்கதும் இல்லை என்பர். மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் பல புதுமைகளைக் கொண்டு விளங்குகிறது.

இவ்வரிசையில் இங்கு பதிப்பிக்கப்பெறுகின்ற சம்பந்தர் பிள்ளைத்தமிழ் நூல் மாசிலாமணி தேசிகரால் இயற்றப் பட்டது. சமயக் குரவர்களுள் ஒருவரான திருஞான சம்பந்தரை குழந்தையாக பாவித்து எழுதப்பட்டுள்ளது. எளிய நடையில் இல்லாமல் கடின நடையுடையதாக உள்ளது. ஆசிரிய விருத்தப்பாவால் பாடப்பட்டுள்ளது. வடமொழிச் சொற்களின் கலப்பு மிகக்குறைவு. சம்பந்தரின் வாக்கையே நினைப்பிக்க வல்ல நடையில் அமைந்துள்ளது. சில புதுமைகளைக் கொண்டும் காணப்படுகின்றது.

இலக்கணங்களில் கூறப்பட்டுள்ள பத்து பருவங்களுக்கு உரியதாக அமைந்துள்ளது. பிள்ளைத் தமிழ் இலக்கணப்படி காப்புப் பருவத்தில் முதற்கண் திருமாலை காக்க வரும்மாறு பாடுதல் மரபு. ஆனால் இது அந்நெறியிலிருந்து வழுவி, சைவ நெறியில் செல்லக் கூடியதாக தோணிபுரத்து இறைவனையையும், உமையம்மையையும் காக்க வருமாறு பாடப்பட்டுள்ளது. இந்நூலின் பலவிடங்களிலும் திருஞானசம்பந்தரின் அருட்செயல்கள் விளக்கப்படுகின்றன. எண்ணாயிரம் சமண முனிவர்களை கழுவேற்றியது, ஆண்பனையை பெண்பனையாக மாற்றியது. வைகையாற்றில் போடுப்பட்ட ஏடுகள் நீரின் போக்கிலிருந்து மாறி அதை எதிர்த்து வந்தது. ஏடுகளை நெருப்பில் போட்டும் எரியாது; இருந்தது, குடத்தில் இட்டு பாதுகாக்கப் பட்ட சாம்பலில் இருந்து பெண்ணை உயிர்பித்தது- போன்றவையெல்லாம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

காப்புப் பருவம்

-பிரமீசர், திருநிலைநாயகி

1. கார்மேவும் பொழில்சூழுங் கதிர்மாட வீதிக்
 கழுமலத்தார் பெருவாழ்வைக் கவுணியனைக் கமலத்
தார்மேவுந் திருப்புயத்துச் சைவசிகா மணியைச்
 சம்பந்தப் பெருமானைத் தமிழ்க்களிற்றைப் புரக்க
பார்மேவுந் மறைவாழத் திருப்பொய்கைக் கரையிற்
 பவளவாய் திறந்தழுத பசுங்குதலை கேட்டு
சீர்மேவுந் திருத்தோணி யழகோடு மிருந்தார்
 சென்றமழ விடையுடனே நின்றதிரு நிலையே

திருநீறு

(வேறு)

2. இரவி துவக்கிவிடு குரது ரகத்திரளை
 மேற்குப் பாய்ச்சு
மிரவின் மடத்திலிடு கனல்வ ழுதிக்கிடவு
 மேட்டிற் றீட்டி
யெரியி லிடக்கடவ தெனவ வரிட்டவுரை
 தீக்குத் தோற்க
வினிய தமிழ்ப்பனுவல் பனிம. லரொத்தெழவும்
 நாட்டைச் சூழ்த்த
பரவை புகப்பெருகு நதியி னில்வெற்றுடல
 மேற்புற் போர்ப்பார்
பழமொழி பொய்க்கவெதிர் வழிமொழி மொய்த்திடவும்
 நீர்குட் பூத்த
பதுமல லர்புதுமை யனைய திருக்குவளை
 சாத்திப் போற்றல்
பழகுப வுத்தனொரு சிரமுரு ளத்தொடவும்
 நாற்றிக் கேற்க
விரவு புகழ்ப்பழன மயிலையி லச்சமொடு
 பூத்துப் பூத்து
விடுமர வெச்சில்பொதி குடம்வ டிவைத்தரவு
 மாற்பொற் றேற்ற

வியனம் துரைக்குளமாண் மிருகமடை யப்புகுதும்
வேட்டைக் காட்டை
விரசில் வளைத்துரிய செலவி வழித்திடவு
மேற்றிற் றோற்றும்.
அரனை விரற்கமல மலரை யெடுத்தினிது
காட்டிக் காட்டி
யழுத தமிழ்க்குழவி சிறுபிறை நெற்றியினில்
வாய்க்கச் சேர்க்க
வடவி துவக்கிவரு பிறவி தவிர்க்குமென
வேற்றிச் சாற்று
மடியவர் தத்தமடி யமரர் துதிக்கவரு
ணீற்றுக் காப்பே.

கான்மாறியாடிய கடவுள்

(வேறு)

3. அலையார் புனல்சூழ் கூடலிலன்
றருகத் திரளைக் கழுவேற்றுங்
கலையார் செஞ்சொற் றமிழ்ப்பெருமாள்
காழிப் பெருமாள் தனைக்காக்க
தொலையா நீதித் திருநீற்றுச்
சொக்கப் பெருமாள் நம்பெருமாள்
மலையான் மகளார் தனிப்பெருமாள்
மன்று ளாடும் பெருமாளே.

சிற்சத்தி

(வேறு)

4. இருளுருவ மாலுததி யமுதாக்கி
வான்தேவர்க் கூட்டவும்
எழுதரிய நான்மறைக ளயன்வாக்கி
லாய்ந்தோதிக் காட்டவும்
இரவியெழு பார்பொதியு டோமிருணீக்குடவும்
வான்றேர்விட் டோட்டவும்
இசைபுனையு மாமுனிவர் தவவாய்ப்பு
நீங்காமாற் பார்க்கவும்

மருவுமத யானைபல திசைகாத்தல்
பாங்காக் காக்கவும்
வடகனக மால்வரையின் முறைகோத்தல்
வான்பாரைப் பார்க்கவும்
மறுகிலிடு வார்களிடு பலயேற்கு
மாண்டாருக் கோட்டினில்
வருநெலிரு நாழிகொடு குடிவாழ்க்கை
வாழ்ந்தாளைப் போற்றுதும்
அரியசிவ ராகவனை யொழுகாற்றி
லூர்ந்தோடத் தாற்கரை
யணைவரு மாமணியை முகிலார்த்த
கோன்கூனைப் போக்கிய
வதிமதுர வாசகனை வழிகாக்கு
மாண்டாலத் தாற்பழ
மருள்புரியு மாதவனை யழல்வேட்கை
மூன்றாய்முட் டாதுதொழில்
கருதுசதுர் வேதியனை யருணீற்றை
யாங்காணக் காட்டிய
கமலகர நாயகனை யலைவாய்க்குள்
வீழ்ந்தோடக் கார்கலி
கடுகியடு சேவகனை வயல்சூழ்ந்த
பூங்காழித் தோற்றிய
கவுணியர் குலாதிபனை யமன்வேட்டை
போந்தானைக் காக்கவே.

விநாயகக் கடவுள்

(வேறு)

5. இட்டபட ரெரியினவர் முட்டச்சொல் வேவமலை
யெற்றிவடு நதியிலிடு சொத்தைச்சொல் வேலைபுக
வெக்கரிடு தரளம்விளை கொற்கைக் குலாதிபதி
மெய்ப்பவிடு தழல்குளிர முற்பட்ட கூனிமிர
விட்டவிடை யுடனுலவு கட்டப் பதாதியமண்
மிச்சயகை யொழுகுகழு வுச்சிக் கடாவியருள்
மெத்தவர வொளிவளர முத்துற்ற நீழல்வரு
வித்தகன் றிசைதிசையி லத்திக்கு மாறருள்க

வட்டகுல கிரிமறையி னுற்பத்தி யானசெவி
யற்பமிசை யினுமிளக வொப்பித்த வாபரண
மர்க்கர்வெயில் விடுசுடிகை வர்க்கத்த வாய்மிளர
வக்கடல்க னடையவொரு கைக்குப் பொறாசுவற
முட்டவெளி மறையவதின் மட்டித்த தோள்வளர
மொட்டைபட வமரர்தலை குட்டிக்கொ ளாமுனிவன்
முத்திதரு பெருவயறு மெத்தப் பராவரிய
முக்கனியு மமுதுசெயு முக்கட்க டவுளையே

முருகக்கடவுள்

(வேறு)

6. கடலையிரட் டியிரட்டி நாளும்விழி
கடியபுனல் கக்கிமுத்தி தேடும்வகை
கருதிமயி ரைப்பிறிந்து வாய்சகதி
கமழவுணை வைப்பெருக்கி மாசுடைய
உடலைவளர் புற்றொடுத்த பாய்பொதியு
முலவுகழு தைப்புரக்க மாவமண
ரொழுகுகழு விற்பதைக்க வாதுசெயு
முரியதுணை யைப்புரக்க நீடுதிறல்
விடவரவி னுச்சிவைத்த பார்வயிறு
மிகவெரியி லுற்றதிக்கி லானைபல
விடுசெவிடு பட்டலக்க ணாகமலை
மிசையுருவு பெற்றதொத்து நாடரிய
வடலினொடு சொக்கரித்த சூரனுட
லுறுகுறை ணைப்புசித்த பேய்கவர
வணிமயிலு கைத்துவெற்றி வேல்கடவி
யமரர்சிறை வெட்டிவிட்ட சேவகனே.

திருப்பொய்கை

(வேறு)

7. இழிந்த தேவரை யாமெலாந்
தேவரென் றேத்திய தடுமாற்ற
மழிந்து போம்வகை யையனைக்
காட்டிநின் றமுதவன் றனைக்காக்க

மொழிந்த நாண்மலர்ச் சீறடிப்
பேதையார் முகிண்முலைத் திருஞானம்
பொழிந்த பான்மணற் தன்மண
மாக்கிய பொய்கையங் கரைதானே

பன்னிரு திருப்பெயர்ப் பழம்பதி

(வேறு)

8. வருமமணை யழித்தானைக் கூனையொழித் தானை
வலியவிடந் தீர்த்தானைத் தலைவீழப்பார்த் தானை
மதுரையினில் வென்றானை யழகுறநின் றானை
மறைவிளங்க வந்தானைத் திருநெறிதந் தானை
திருமுலையுண் டழுதானைக் கண்டுதொழு தானை
திருநீறு புனைந்தானைக் கலியைநலிந் தானை
தேவர்தொழற் கரியானைப் பரவவுரி யானை
திருஞான சம்பந்தப் பெருமானைப் புரக்க
பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி சுரும்பார்
பிரசமலர்ப் பொழில்சுடைசூழ் வெங்குருமெய்த் தோணி
பிறங்குழனற் பூந்தராய் திறங்கொள்சிர புரஞ்சீர்
பேசரிய புகழ்புறவந் தேசுயர்தன் சண்பை
பர யகதி தருங்காழி கொச்சைகழு மலமாம்
பலவமரர் நிலைகுலையப் பிரளயங்கோத் தெடுத்த
பரவையினி லுகழுந்த வழுந்தாது மிதந்த
பன்னிரண்டு திருப்பெயரும் படைத்த பழம்பத்து.

திருப்பதிகம்

(வேறு)

9. செய்யமலர்த் திசைமுகனுந் திகிரிதரித் தோனுந்
தேடரிய திருவுருவைத் திருவிரல்முன் னிறுத்தி
யையனிவ னெனக்காட்டி யழுதழுத முண்டா
னாணைறம தென்றபெரு மானையினி தளிக்க
வையைநதிக் கெதிர்நடப்பக் கனல்குளிரக் கிடப்ப
மாமுனிவர் தொழுதரற்ற நான்மறையின் சிரத்தைப்
பையரவின் விடந்தீர்ப்பப் பனைபழுப்பப் பார்ப்ப
பானுறுந் திருப்பதிகம் பதினாறா யிரமே.

சட்டை நாதர்

(வேறு)

10. முனையானவை யானைகண் முகமானவை தாமரை
மொழியானவை தேனிகல் விழியானவை வேலவை
விலையாள்வன காமனை யெனமாத ருலாவரு
மிகுகாழியுண் ஞானனை யருள்கூர்தரு மேல்வரு
மலையான்மக ராலய மகல்வான்முக டேறிட
வசையாதொரு தோணியி லடையாரெயில் காதிய
சிலையான்மலை யான்மக ளுடனேயழ கோடமர்
திருவாரொளி நீடிய திருஞாயிறு காணியே

மற்றைத் தெய்வங்கள்

(வேறு)

11. தருமத்தின் வழிபிழைத்தார் புரமெரித்துச் சிலர்க்குத்
தரத்துறையும் பதங்கொடுத்தோ னரத்துறையி னளித்த
திருமுத்தின் சிவிகைமிசை யசையவரு மணியைச்
சேவித்தங் குடன்வருவார் செங்கமலத் தயன்மால்
பருமத்தக் களியானைத் திசையெண்ம ரருக்கர்
பன்னிருவ ருருத்திரர்கள் பதினொருவர் மறைநூற்
கருமத்து மருத்துவராங் கோரிருவ ரெழுவர்
கன்னியர்க ளெனவுரைக்குற் கனகதலா திபரே.

செங்கீரைப் பருவம்

1. கோலொன்று கொண்டகில வலயம் புரக்கவரு
கோமாறன் மேவியதமிழ்க்
கூடலிற் சண்மூகர் திருமடத் திட்டவெரி
கொற்றவற் பற்றவொழியா
மாலொன்று மங்கையர்க் கரசியார் படுதுயரின்
வலிகண்டு சென்றதவிரா
வஞ்சப் பெருங்கூனும் வெப்புந் தவிர்த்தருளு
மதுரவா சகமதகுயாய்
காலொன்று மாநதி பரந்துவரு கழனியிற்
கனையெனக் குவளைகளைவார்
கண்டுவெரு வித்தங்கள் கைநெரித் தருகுமிடை
கன்னலங் காடுமறையச்

சோலொன்றி விளையாடு சீகாழி நாடாளி
செங்கீரை யாடியருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடியருளே.

2. ஒருமலைச் சாபம்வளை யத்திரி புரஞ்செற்ற
வும்பர்நா யகனருளினா
லோரா யிரங்கதிர்க ளுடையசூ ரியரடைய
வுடனிருந்த தனையவொளிசூழ்
பருமணிக் காலினொடு பலகோடி வெண்டிங்கள்
பாரித்த தனையதரளப்
பந்தரிற் பட்டுச் சரத்தன்று குலவவரு
பரசமய குலகாலனே
தருமலர்த் தாதுவிரி தாமரைக் காடுமெழு
தாணீல முங்குமுதமுந்
தந்தமண நாறுமுலை தந்தவுமை யாளொடு
தடம்புனற் கரையிலுதவுங்
திருமுலைப் பயனாறு சீகாழி நாடாளி
செங்கீரை யாடியருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடியருளே

3. கையினா னாடோறுங் களமரிது களையெனக்
களையொணா தென்றும்வயலிற்
காலினால் மடையுழறு கருமேதி யினம்வரிந்
கவரொணா தென்றுமணுகா
வெய்யகா னகமணுகி மேயுமா னினம்வந்து
மேயொணா தென்றமலைவாய்
விளைதினை காக்கும்வகை வெட்டுவார் படைகொண்டு
வெட்டொணா தென்றும் விரகால்
மையுலா வியவிதழ்க் குவளையும் குலகொடி
வள்ளையுந் தளவுமழகார்
வண்குமிழு மிருளகல மாணிக்க வொளிவீசு
மாடமா ளிகைதொறுமோர்

செய்யதா மரையின்மலர் சீகாழி நாடாளி
செங்கீரை யாடியருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடியருளே

4. அகருவட் டக்கலச முலையரிவை யொருபக்க
மரசாள விட்டுமுடிமே
லம்பரத் திடையுலவு கங்கைப் பெரும்பரப்
பலையெறிய விட்டுமிசையே
பகருமெட் டுத்திசையு முலவுபுர மெரிபடப்
பகழிவிட் டயனுச்சியிற்
பச்சைத் தலைக்குளிடு பிச்சைக்கு நச்சிவரு
பரமனருள் பெறுபுதல்வமா
மகரவட் டப்பரவை யெழுமுகட் டுக்கிழிய
மஞ்சுவிரி யுங்குலைவிடா
வாழைப் பெருங்காடு தாழைப் பெருங்காடு
மண்டிவளர் சக்ரவாளச்
சிகரவட் டத்தைநிழ லிடுபுகலி வருகுசில
செங்கீரை யாடியருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடியருளே.

5. கஞ்சா கனத்தரிவை பிரியாத தாமரைக்
கண்ணனுங் கண்ணனுதரக்
கமலா சனத்தில்வரு திசைமுகக் கடவுளுங்
காணாமல் னின்றுகதறப்
பிஞ்சாய வெண்மதி முடிக்குஞ்சடா டவிப்
பெருமானை ஒருமாமலைப்
பேதையொடு கண்டருளி வேதநிலை யிடவுரிய
பிரமபுரி வருபரம்போ
ரஞ்சாத கதிரிரவி யிரதந் துவக்கிவடு
மாடல்வெம் புரவியிருபா
லசையவடு வெண்சா மரைப்பெருங் கற்றையுட
னலர்கதிர்க் கற்றையசையச்

செஞ்சாலி யுடுமுக்டு தொடுபுகலி வருகுருசில்
செங்கீரை யாடியருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடியருளே.

6. வரைசிலை யாம்படி வளையவு கந்தா
னூர்ந்தா னுஞ்சால
வயிறது காந்திய தழல்செல வூன்றிய
மண்டா னுண்டாக
வுரைபல தாங்கிய நிசிசரர் தாங்குடி
லொன்றாய் வந்தேற
வுரிமையர் வேண்டிய கதிபெற யீந்தவன்
மைந்தா வண்டூதும்
விரைகமழ் பூம்பணை யிணையிடு தூண்டல்வெ
குண்டே செஞ்சேல்கள்
மிசைசெல வாங்கனி விரவிய மாங்கனி
வீண்டூ றுஞ்சாறு
திரைபொர வோங்கிய புகலிய ராண்டகை
செங்கோ செங்கீரை
செருவினி லன்றெழு மருகர் குலாந்தக
செங்கோ செங்கீரை.

7. அயலுரை தாங்கிய சிறுவனோ பன்றறை
யுந்தூ ணங்கீறி
யவனுடல் தான்றுடை யதனிடை போழ்ந்தனை
யுங்கோ டுஞ்சாது
வயவலி தான்சொலும் அளவினி லாங்கவன்
வெங்கோ பந்தீர
வயறெரி தோன்றிட மிசைகொடு போழ்ந்தவன்
மைந்தர் கொண்டாடு
மியலொலி பாண்கிளை மிடையொலி வாங்கிய
வெங்கோ டுங்கோடு
மெழுமொலி தேன்றரு மினவொளி மூன்றழல்
அங்கே குன்றாத

செயலொளி ஓங்கிய புகலிய ராண்டகை
செங்கோ செங்கீரை
செருவினி லன்றெழு மருகர் குலாந்தக
செங்கோ செங்கீரை.

8. வசையற வோங்கிய வொருதிரு வோங்கலின்
வந்தே தன்றோளின்
வலிமை யெலாஞ்செய முனிவினில் வீழ்ந்து
நரம்பா லென்பாலும்
இசைபல தோன்றிய சூரன்முதன் வாங்கிய
விலங்கே சன்பாட
வினிவரு தீங்கென வெறிபடை யீந்தவன்
மைந்தா மென்காவி
னசையுடன் மேய்ந்திள வெருமைகள் மாங்கனி
தின்றே நின்றாள
நலமுட னீன்றதன் மகநினை வாம்பெரு
நண்பால் வெண்பால்கள்
திசைகளெ லாஞ்சொரி புகலிய ராண்டகை
செங்கோ செங்கீரை
செருவினி லன்றெழு மருகர் குலாந்தக
செங்கோ செங்கீரை.

9. விரிகதி ரோன்சூழ லிமகிரி யீன்றவள்
வெங்கோ பந்திர
விதிதலை போம்படி முனிதலை வேண்டி
விருந்தாய் வந்தாரும்
விரிவளை யேந்தியு மியைதயவர் வேந்தனும்
நின்றார் கண்டாரு
மடிபிண மாம்டி பொருதபி ரான்றிரு
மைந்தா பண்பாடி
யரியினி மூண்டெழு குழலிது காண்பவர்
நெஞ்சோ டுங்கூட
அவிழ்தர வாங்கொரு சிறுகிடை நாம்படி
பந்தோ டன்பாய

தெரிவையர் தாம்பயில் புகலிய ராண்டகை
செங்கோ செங்கீரை
செருவினி லன்றெழு மருகர் குலாந்தக
செங்கோ செங்கீரை.

10. வருபகை யேங்கிட ஒருபகல் வாங்கிய
சங்கர ளும்பாணி
வடகிரி சூழ்ந்தலை கடைகயி றாம்பணி
வன்கா ளங்கால
அருள்புகல் காண்கிலம் வழியடி யோம்பர
மென்றே வந்தார்கள்
அழுதுண வாங்கெதிர் விடனுகர் வான்திரு
மைந்தா வண்போதில்
இருசிலை தேங்கமழ் ஒருசிலை தாங்கொடு
நின்றார் வென்றேறும்
இருகணை பூங்கணை யிவையிவை வாங்கி
யெதிர்ந்தார் நெஞ்சோடுஞ்
செருவமர் பூண்டெழு புகலிய ராண்டகை
செங்கோ செங்கீரை
செருவினி லன்றெழு மருகர் குலாந்தக
செங்கோ செங்கீரை.

தாலப் பருவம்

1. இனிதாகக் கமலப்பூ மேய்மேதித் திரள்மீ
திளவாளைத் திரள்சீற வேறாவன் கரைசூழ்
கனிவாழைத் புதல்சாடா வோடாவூர் புகுதுங்
கதிர்மாடம் பயில்காழிக் கதிபாவான் மதிதோய்
பனிவாசப் பொழில்சூழத் திகழ்கூடல் சமணப்
பசுவெண்ணா யிரம்வந்துட் படுதோழ திடையே
தனிஞானப் புலியொப்பாய் தாலோதா லேலோ
சம்பந்தப் பெருமாளே தாலோதோ லேலோ

2. விண்டாவத் திவரைத்தெண் டிரைவீசுங் கடல்வாய்
விடுகற்றூண் மிதவைக்கே விடுபுற்பா யுடையாம்
திண்டாடக் கரையேறத் தமிழைத்தந் தருளுந்
திருநாவுக் கரையன்றன் சித்தத்தின் றுணையே

வண்டானத் தெழுகொல்லிப் பண்பாடச் சிறைதே
மண்னாறும் புனலூடே மலரும்புண் டரிகத்
- தண்டாமற்-றிருமார்பா தாலோதா லேலோ
சம்பந்தப் பெருமாளே தாலோதா லேலோ

3. உருவைப்புற் படமிட்டுப் பொதியகற் றமனே
உலவகத் துறியிற்புக் கினுமொட்டைச் சமணை
கருவைக்கொத் தினைநட்டுத் தலமுட்டப் பயில்பற்
கழுவித்தைத் தைமையாளுங் காழிக்கற் பகமே
திருவெக்கும் படியொக்கத் திகழ்சித் ரப்பிடியைத்
திசையெட்டும் புகழ்பொற் குடம்விட்டுத் தெரியத்
தருவிக்கத் தமிழ்பெற்றாய் தாலோதா லேலோ
சம்பந்தப் பெருமாளே தாலோதா லேலோ.

4. வாராமே யறிவைப்போ கெனவிட்டுப் புவியோர்
வஞ்சப்புண் சமைத்தே மதிகெட்டுத் திரியப்
பாராமே யதுவன்றித் திகிரிக் கோன்மாயப்
பணிசெய்யப் பழகாமே பழுதாகா மறைநூல்
சோராமே யடிஆடுந் தொண்டர்க்கோர் துயரஞ்
சூழாமே தமிழ்மாறன் றுயரப்படுச் சமணைச்
சாராமே முலையுண்டாய் தாலோதா லேலோ
சம்பந்தப் பெருமாளே தாலோதா லேலோ.

5. அமிழ்தாரும் படிதேவர்க் கடல்நீரைக் கடைநா
ளரிகாணப் பெருவேகத் துடனாகப் பகுவாய்
உமிழ்கோபந் தருகோலத் தாலாலந் தனையன்
றுண்டானைப் பிரியாவாழ் வுடையாள்மா மகளே
குமிழாரங் கரைவாரிக் கொணர்வையைப் புனலிற்
குணபாகத் திடுமேடக் குடபாகத் தெதிரத்
தமிழ்பாடுந் திருவாயா தாலோதா லேலோ
சம்பந்தப் பெருமாளே தாலோதா லேலோ

வேறு

6. சதவிதழ் முகட்டிலெழு சதுமறை தரிப்பதொரு
தலைவனெனு மெய்ப்புனித தாலேலோ

தாமலி பவுத்தனொரு தலைமகி தலத்தினிடை
தகரவிழ வைத்தமுனி தாலேலோ
அதிமதுர முத்தமிழி னடைவுதெரி யத்தெரிய
வழுதழுது நிற்குமிறை தாலேலோ
வடல்படு திசைச்செவி னமணர்குல சத்ருவென
உறையும்விரு துக்கதிப தாலேலோ
மதகினடி குத்துவன வலைகுலைய மொத்துவன
வழையடவி தத்துவன வாளோடாள்
மறியவெதிர் வெட்டுவன வலைகிழிய முட்டுவன
மலர்நிழலை யொட்டுவன வேரோர்செல்
கதமிகுக ளிற்றினின டைனநிறை தடத்துலவு
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தழலி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலோலோ.

7. இனமொடுப றித்தலை யருகரிக பூத்திகழு
மெரியினிடை யிட்டவுரை தோலாமே
யிருகரை மெய துக்கியொரு குலகிரி யெடுக்குநதி
யிடையிடு தமிழ்ப்பனுவல் போகாமே
சினமிக வடர்த்தடை வழுதியுட லூட்கும்வகை
திரியவிடு வெற்பிலவன் வேலாமே
சிவனிடமி ருக்குமுமை திருமுலைசு ரக்கவரு
திருவருள் படைத்தமுனி தாலேலோ
முனைமுனை யறுத்துழவ ரிடவிடவெ டுக்குமரி
முறைமுறை குவித்தபல சூடார்போர்
முகில்படு முகட்டினிடை முழுகவிர தத்தினுடன்
முதன்மைதரு பச்சைவய மாவாலே
கனகவரை சுத்திவரு கதிரிரவி யுட்கவளர்
கழுமலர் நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தழலி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர்க் குலக்குரிசில் தாலேலோ.

8. படைவணி கணைச்சிவிடு பணியெயிறு குக்கவிழு
படுகொலை னத்தெரிவை பாராமுன்
பதுமவிழி யுத்தபுனல் பரவையி னலைக்கவருள்
படுதுயர்தி ருக்கண்மலர் காணாமல்

விடைபெறவெ டுத்தகொடி மருகலுறை யுத்தமரை
விரகொடு திருப்பதிக நேர்கூறா
விடமதுக டித்தவழி யிழியவரு ளிப்புவியின்
மிகுபுகழ் பரப்புமுனி தாலேலோ
மடைதொறு முகிழ்த்தமதி யெனமணி குவித்தரவின்
வரிவளை யொலிப்புவத னோர்பாலே
வளர்பல வெடுத்தகனி கிழியவதி லுக்கபுனல்
மதகினி லொலிப்புவத னோர்பாலே
கடைசியர் மலர்க்கைவளை கலினென லொலிப்பநிறை
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தழலி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ.

9. மதுரகவி தைக்கடலில் வருபெருளம ரக்கலரல்
வழிவிடுவ னப்புடைய மீகாமர்
மறிகடல டைத்தவனு மறையவனு மதிப்பரிய
மணியினைம தித்தருள்வி யாபாரா
வதிர்கலி புறச்சமய முதுகளைய றுத்துரிய
வறுசமய வித்துவிளை வேளாளர்
வதிமதுர சத்துவிலை மதுரையி முக்குடைய
வமண்மிரு கறுத்துவரு கானாளர்
முதிரும்வட வைக்கனலின் முறுகுதறுகட் பணியின்
முதுகுகிழி யப்பலவின் வேர்வாய்வீழ
முதுபலமெ டுத்தவழி யுரகபண பத்திநிறை
முழுமணியெ றித்தவெயில் வாயாவூர்
கதிரவனி லெட்டுமடி யொளிபெருக வெற்றிபுனை
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தழலி னெறிமுறை வளர்க்கவரு
கவுணியர் குலக்குரிசில் தாலேலோ

10. அருகுமுது விட்டவர்கள் அடையநுக ரக்கனியை
யடிதொறு நிரப்புவன தேமாவா
கைமிருள மொய்த்தபொழில் மரமதுவை யுய்த்ததிசை
யழகினொடு கட்டுவன தேனீமோய்

குருகுவெரு வக்கமல மடுவினையி னத்துவரு
குலனுட னுடிக்குவன நீர்நாவாய்
கொடியவிர கரக்கரசர் குழீஇழி புதுக்குவன
கொழுவணி கலப்பையத னோர்பாலே
பெருகுவயலிற் புகுதுமத கினை யுழக்கிவரு
பிரியமனை கிட்டுவன சேதாவாழ்
பெருமைதரு நற்பழன மழகுற வுகத்தொடுக
முயகுமென நிற்பதொரு பேராலே
கருதரிய திரைப்பரவை யுலகினை விளக்கவரு
கழுமல நகர்க்கதிப தாலேலோ
கருதரிய முத்தமிழி னெறிமுறை வளர்க்கவரு
கவுணிய குலக்குரிசில் தாலேலோ.

சப்பாணிப் பருவம்

1. பொங்குதே னொழுகவிடு சண்பகா டவிதழுவு
பொய்கைசூழ் புகலிநகரிற்
புனிதவா ணகையுதவு குமுவா யமுதவிதழ்
பொழியுஞா னத்தமிழினால்
வங்கமார் கடல்பொதியு மெண்டிசா முகசிகர
மந்தமால் வரைதழுவுபூ
மகளைவாழ் வித்துரிய மறையைவாழ் வித்தெலை
வாழ்வித்த மாநாயகன்
கங்கைநா யகனிமய மங்கைநா யகனிலகு
கயிலைநா யகனடுபடைக்
காளிநா யகன்வலிய கூளிநா யகனிருவர்
கருதுநா யகன்மறுவிலோர்
தங்கநா யகன்மதலை சண்பைநா யகனிது
சப்பாணி கொட்டியருளே
தலைவலய முழுதுமர வொலிவளர வமுதமுனி
சப்பாணி கொட்டியருளே.

2. துங்கமத கிற்களமர் துன்றுகுடி லிற்புரிசை
சூழுமக ழிப்படுகையிற்
சுழிதரு குரம்பின்மலர் பொழிதரு வரம்பிலனி
சூழ்தரு கரும்பின்முதலைப்

பொங்குமுறை யிற்புதிய ஞெண்டினளை யிற்குவளை
புல்லுமல ரோடையில் னறும்
பூகக் கிடங்கிலரி தாளிற் பரம்பிலிடு
போரிற் களங்களில்விடா
மங்கல மலர்ப்பணையில் வண்டெழு குளக்கரையின்
மஞ்சளிடு பத்திகளினீள்
வாழையட ரற்பெரிய தாழையடி யிற்கனிகொள்
மாவினிழ லிற்பொருகடற்
சங்குசொரி முத்திலகு சண்பைநக ருக்கதிப
சப்பாணி கொட்டியருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டியருளே.

3. அருவிமுக் கடமுடைய தலகைசுத் தியபடைய
தறுபகத் திருவுடையதோர்
அரவிடரப் படவருவ தடர்பொருப் பொடுபொருவ
தறவிருட் டியவுருவதா
ளொருகரக் கொலைகடிய துலகடுக் கியவடிய
துடுவுழக் கியமுடியதா
ருயிருருக் கியவிழிய துரிசெய்தப் பலியுழலு
மொருவர்மெய்ப் புதல்வவொளிசூழ்
மருமலர்க் கமுகடவி கதலிகைச் செறியடவி
வகுளமொய்த் திடாடவிதேன்
மலிசுளைப் பலவடவி யகருவிட் டெழுமடவி
மதுமலர்க் குரவடவிநீள்
தருநெருக் கியவடவி தழுவுசொச் சையர்தலைவ
சப்பாணி கொட்டியருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டியருளே.

4. நேர்மதற் குப்பெருக நொந்தார்க ளாயொன்றை
நோவாமை செய்யநினைவார்
நோயுடம் பானபுற பாயுடன் பாழாக
நுண்மயிர் பறிக்கைதவிரா

மாமரைப் பேயமணர் கழுமேல் கொளப்புத்தார்
வன்சிரமுருட் டியருள்சேர்
மன்னுதிரு முத்தணி மணிப்பந்தர் மிசைநின்ற
மறைவிளங்களிறு மறைதோய்
காமலர்தற தேனுண்டு மதுகரம் பெடையுடன்
பாமரம் பாடவருகே
கலபமயில் நடமாட முருகுகமழ் செற்றெலங்
கவரிபல வீசவன்னந்
தாமரைச் சிங்காத னத்தேறு புகலிமுனி
சப்பாணி கொட்டியருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டியருளே

5. கொலைபயிலும் வக்சரக்கை யிந்தராதி தேவர்தங்
தலமாலை யிட்டுமகரக்
குரைகட லுடுத்தவடி பிஃறிவரு பன்றிவெண்
கோடது புனைந்துமுடிமேல்
நிலமைதரு கங்கா நதிப்பெருந் திரையுட
னெருக்கினை முடித்துழலும்வாய்
நீடிய பணாமகுட மாசுணம் விளைத்ததொரு
நிறைநா ணணிறைந்துமதுரக்
கலைமகளு மலர்மகளு மணமகளு மடிபரவு
கனகமலை யரையன் மகளைக்
கமலமக நடன்மால் புகுந்தேவல் பலசெயக்
கைப்பிடித் தருளுமுரிமைத்
தலைமகனை ஒருத்திருத் தாதையென வுடையமுனி
சப்பாணி கொட்டியருளே
தலவலய முழுதுமர வொலிவளர வழுதமுனி
சப்பாணி கொட்டியருளே.

6. உலவுசெஞ் சுடரிரவி ரதவேலம் புரிகிரி
வொற்றிய கயற்கோன்விடா
துடல்வளைந் ததுநிமிர வடவிலங் கலினுமுவை
யுற்றெழுது பொற்றொறினா

னிலவுநண் புயர்புதல்வி யுலகின்மங் கையரரகி
யொக்கலையின் மெய்க்கூடல்வாய்
இகலியன் றமண்முழுகு சகலபண் டிதமிசையை
யெட்டிய தலைப்பூகமா
மலரின்வந் துலகுதரு பிரமன்மூன் பரவிவர
விட்டபல நெட்டே ணியோ
மலைபிடுங் கியபொழுது சிவன்விசும் புகட்கியைய
நட்டவயி ரக்கால்களோ
குலவுமிங் கிவைகளென நிலவுசண் பையர்தலைவ
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.

7. நிமிரும்மங் கொடுமுடிக ளொடியவெங் கரிகரடி
நிற்குநிலை கொட்டோடவே
நெடியுசந் தகில்பறிய மணிமுகத் திருகரையி
னெற்றபல செற்றோடிமூள்
தமரமெங் கணுமுலவு நிலவுபைங் கமுகமுகில்
தட்டிவரு கோட்டாறுசூழ்
தழுவுசண் பையர்தலைவ வெழுதுசெந் தமிழ்
கொட்டியருள் சப்பாணியே
அமரரஞ் சலிபரவு சரணபங் கயமுனிவர்
அற்புத கலிக்கோநீ
ரடைசுகுண் டிகையருகர் குலபயங் கரவசுரர்
படிப்படக்கொய் கோபமுள்
குமரனன் புறுதுணைவ வரவெனும் பணிவலவ
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடும் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.

8. அறுபதர் திகழ்குமுத விதழ்திறந் தழுதழுது
துய்த்தது முலைப்பாலைவான்
அமரருஞ் சதுமறையு முனிவருந் தொழவினிது
பெற்றது திருத்தாளம்வாய்

முறுகுசெந் தழலினிடை தளிர்நிறம் பெறவெழுதி
விட்டது தமிழ்கோவைவான்
முறுவலென் புகர்வாதிவ தொருகுடங் கொடுவர
வழைத்தது மலிர்ப்பாவைகார்
செறிவிசும் புழுதபொழின் மிழலையம் பதியர
ளித்தது படிக்காசுசூழ்
திருவிளங் கியமருகல் மருவுசெஞ் சடையரொடு
கற்றது விடந்தீர்வையார்வ
குறுகிநின் பெருமைசெல வென்நலம் பரவுமுனி
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.

9. கடியவெம் பிறவிதரு கடல்விழுந் தவறுமவர்
பற்றவரு நற்றோணியே
கலியமிழ்ந் திடவிலகு கருணையம் புறலது
பரம்பிய கார்காலமே
அடிபணிந் தெழுமவர்த மிடிகெடும் படியரு
ளப்பதொரு கொட்டாரமே
யறவரும் பயமயி லரனுடன் படவினிது
பெற்றதொரு கைக்காணியே
நெடியவன் சமணிவுளி நிறைபுணம் படவுழறி
நிற்பதொரு புத்தானையே
நிலையுடன் றெரியுமிய லிசையெனும் பயிர்
வித்துவரு பொற்பூமியே
கொடியகுண் டர்கள்செவிடு படமகிழ்ந் திருகைமலர்
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.

10. கழுமலந் திருவதிகை திருவலம் புரமருகல்
கற்குடி திருக்கோவலூர்
களர்புறம் பியமயிலை சிவபுரங் கடைமுடி
கருக்குடி திருக்கோடிகா

மிழலைவண் டுறைபகுதி நியமமண் குடிசுழியல்
வக்கரை களப்பூர்நணா
விளவர்கொங் கணமிடவை திருவலஞ்சுழியில்
வரத்துறை திருச்சேஞலூர்
பழனனம் பலமதுரை வளைகுரங் கொடுமுடி
யருட்டுரை திருப்பூவனூர்
பறியல்தண் டலைகயிலை வலிவலஞ்ச சிறுகுடி
பருப்பத மிறைக்காடுசேர்
குழகர்தங் கழல்பரவ வுரியசெந் தமிழ்விரக
கொட்டியருள் சப்பாணியே
குறிகெடும் பரசமய விருள்கெடுங் கதிருதய
கொட்டியருள் சப்பாணியே.

முத்தப் பருவம்

1. அலையுண் டமரர் விடம்பற்றி
யாடுஞ் சுடிகைப் பணாமகுடத்
தடல்வாள ரவந் தனிகோபித்
தழலா யிரம்வா யங்காப்ப
நிலையுண் டனவே யுலகடுக்கி
நிற்குங் கனகக் கிரிதிருப்பி
நீலப் பரவை கடைந்தநாள்
நெடுவா னவரும் நெய்யுண்டு
மலையுண் டுவரிப் புனலுண்டு
மண்ணுண் டவனும் மண்ணுண்டு
மாளா வண்ணம் விடமுண்ட
மணவா ளன்றன் மனையாட்டி
முலையுண் டமுத கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருகடையபிரான்
முத்தந் தருக முத்தமே.

2. எருக்கே புனலே கடிக்கொன்றை
யிணரே யரவே யிளம்பிறையே
யிவையே முடிக்குஞ் கடாமகுடப்
பெருமா னுலகுக் கினிதளித்த

தருக்கே தெய்வத்தமிழ்க் கொழுந்தே
தனிநான் மறையின் கிழங்கேபுன்
சமணப் பரிமேய் கரையுழக்குந்
தனிவா ரணமே திருஞானப்
பெருக்கே யடியார் பெற்றபெரும்
பேறே நாறுங் குமுதமே
பேணுந் தொண்டைச் செங்கனிவாய்
பீடார் சோதிப் பவளமே
முருக்கே யனைய கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான்
முத்தந் தருக முத்தமே.

3. வழியுங் கரையிற் கழைமுத்து
மணியுங் கொழித்துச் சுழித்துவரும்
மானீ ரரசின் வடகரைவாய்
மண்ணா டாளவிண்ணாட்டின்
றழியுங் கோயில் மகிழ்ந்திருந்த
மிழலைப் பெருமான் றிருவளா
லிலகும் படிக்கா சினிதுபெறு
மிசையா கரனே மிசைதாவிப்
பொழியுந் தரங்கக் கடலாடைப்
புவியோ ரடங்கப் பரசமயப்
பொய்க்கே விழுந்து பொறிகலங்கிப்
போகா. வண்ணந் தமிழ்மாலை
பொழியும் பவளக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான்
முத்தந் தருக முத்தமே.

4. கொத்துப் படுநாண் மலர்க்கூடைக்
குஞ்சி யர்க மஞ்சனநீர்
கொள்ளும் கலசம் வாயாக
மெல்லு மிறைச்சி யமுதாகச்

சித்தத் தெழுந்த பேரன்பாற்
சிலைக்கை வேடன் பணிசெய்யுந்
தருக்கா ளத்தியி றைவர்பாற்
செம்பொற் சின்னம் பெற்றானே
மத்தக் களிற்றுப் பனைமுத்தும்
வளைவாய் முத்துங் கழைமுத்து
மண்ணுஞ் செந்நெல் நாண்முத்துங்
கன்னல் முத்தும் நிகரொவ்வ
முத்துப் பவளக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே
முத்தின் பந்த ருடையபிரான்
முத்தந் தருக முத்தமே.

5. நடிக்கும் பெருமான் பணியாலே
நாபிக் கமலத் தொருமுனிவ
னாட்டுங் கிரியில் கயலொதுங்கி
நாபிப் புலியைத் தொருசெண்பால்
அடிக்கும் பெருமான் பிரியாத
வந்தப் புரத்துக் கழகளித்து
அங்கைக் கமல மங்கையருக்
கரசி யுடனே யரசோட
இடிக்கும் பெருமாள் மதயானை
வழுதிக் குரிய மந்திரனால்
எண்ணுந் தலைமைக் குலைச்சிறையார்
நெடுநா ளெண்ணு மெண்ணமெல்லாம்
முடிக்கும் பெருமாள் சம்பந்தப்
பெருமாள் முத்தந் தருகவே
முத்தின் பந்த ருடையபிரான்
முத்தந் தருக முத்தமே.

6. பிணமுடைச்செஞ் சுடலை நட்டம்
பயிலவிருப்பம் பெருகவோர்
பிறைமுடிக்கும் பரமர்பக்கம்
பெரிதுவக்கும் தலைமைசேர்

மணமிருக்கும் குழலி செப்பின்
திருமுலைக்கண் பருகுபால்
மருவியித்தெண் டிரைவளைக்கும்
புவிவளர்க்குங் குழிபேர்
உணவுத்தந்த தவமெனக் கொண்
டுயிருருக்கங்காண் டிகையினோர்
டுடலுகைத்தங் கெதிர்வரக்கண்
டவர்வருட்டும் பரிக சேர்
கணவரைக்குண் டரையு ழக்குந்
தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன்
றருகமுத்தந் தருகவே.

7. புளகமெய்த்தெண் டினர்பிறக்கும்
பிறவியச்சந் தளரவார்
புனல்விழிக்கண் டலைபறிக்கும்
பொறியிலசுற் றந்தளரவே
யளவறுக்கும் பெருநதிச்சென்
றகல்வெதுப்புந் தளரவே
யரணைவிட்டங் கரிமயக்குண்
பழிவழக்குந் தளரமேல்
விளையநிற்குந் தவமில்பொய்ப்புன்
சமயமுற்றுந் தளரமுன்
வினைபடைக்குங் கலியிடுக்கண்
பெருகவெப்புந் தளரவூர்
தளர்நடைக்கின் கிணியரைச்செங்
குழவிமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன்
றருகமுத்தந் தருகவே.

8. உவமைமுற்றும் பவளமொய்க்கும்ந்
திருவுருக்கொண் டவனுமே
வுருவுபச்சென் றவனிடப்பங்
குரிமையிற்கொண் டவருநீ

டவலொடப்பந் திருவயிற்றங்
கடைசிவக்குங் களிறுமே
லமரர்தத்தஞ் சிறைவிடுத்தங்
கசுரரைக்கொன் றவனுமார்
துவலைமொத்துஞ் சடையருக்கன்
புடையமெய்த்தொண் டினருநீள்
சுருதிமுற்று திருவிசைப்பண்
டிருச்செவிக்கொண் டுருகவோர்
தவமில்புத்தந் தலையுருட்டுந்
தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன்
றருகமுத்தந் தருகவே.

9. வினையுடைப்புன் சமணிருட்டின்
றிரள்குலைக்கும் பருதியே
வசயமுற்கொண் டெழுபவுத்தன்
றலைதுளிக்குங் கருவியே
மனதிடைப்பைங் கமலவட்டந்
தனலிருக்கும் பிரசமே
மணிநகைச்செந் துவரிதழ்க்கொண்
டணிகொள்முத்தந் தருகவே
யெனதிடுக்கண் களையநிற்கும்
படியெனக்கன் புடையதா
யெனையடர்க்கும் பகையினுக்கும்
படையெனக்கன் புடையமர்
தனமெனக்குண் டெனநினைக்குந்
தலைவமுத்தந் தருகவே
தமிழ்வளர்க்கும் புகலியத்தன்
றருகமுத்தந் தருகவே.

வாரானைப் பருவம்

1. சிகரா சலப்பொற் சிலையாழி
ருக்கும் தெய்வத் தோணியாற்
றிசையுற் றிசையின் முறைமுறையி
னொலிக்குஞ் சங்கின் சேனையாற்

புகரார் பகழிப்பூமா ரன்
வசத்தெடுத்த சுத்தத்தார்
பூணார் மணியும் நித்திலமும்
வெயிலும் நிலவும் பொழிதலாற்
றுகிரார் கனிவா யின்னமுதுந்
துங்கக் கடல்வேல் விழிநஞ்சுஞ்
சொல்லார் கமல மதிவதன
நல்லா ருடனே தோன்றுதலால்
மகரா லயம்போல் மிகவிளங்கும்
புகலிப் பெருமாள் வருகவே
வடநூல் பெருமாள் தமிழ்ப்பெருமாள்
மறையின் பெருமாள் வருகவே.

2. சடங்கின் படியே அயன்புரியச்
சக்ரா யுதன்கை நீர்வாழ்ப்பச்
சந்ரா தித்தர் விளக்கெடுப்ப
இந்திரா திபர்கள் தனிபோற்றப்
படங்கொண்ட கன்ற நிதம்பதடப்
பச்சைப் பிடியைக் கலியாணம்
பண்ணும் பெருமான் திருச்செவிக்குப்
பாடும் பெருமாள் வருகவே
விடங்கொண் டகன்று கடைசிவந்து
வேலைப் பழித்துச் சேலடர்த்து
வெல்லும் புருவச்சிலை வளைத்து
விடுகா தளவுந் தாவடிபோய்
மடங்குங் கண்ணார் நடம்பயிலும்
புகலிப் பெருமாள் வருகவே
வடநூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள்
மறையின் பெருமாள் வருகவே.

3. பாளைக் கமுகின் மிடறொடியத்
தாவிக் கதலிக் குலைசிதறிப்
பாய்ந்து மறந்தும் புனல்சூழ்ந்து
பங்கே ருகத்தின் பரியபசுந்

தாளைத் துகைத்து மலருழக்கித்
தாதுட் படியுஞ்சுரும் பெழுப்பித்
தாளஞ் சொரியுஞ் சலஞ்சலத்தைத்
தள்ளிக் கரையிற் சதகோடி
யாளைக் கறுவிச் சேலினத்தைச்
யடர்த்துத் திசையிற் பதிங்காத
மகன்றமடுவி னிடை மடங்கா
தானே கைக்கொண் டஞ்சாது
வாளைக் களிறு விளையாடும்
புகலிப் பெருமாள் வருகவே
வடநூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள்
மறையின் பெருமாள் வருகவே.

4. பரம்பை யடிப்பார் கயல்பிடிப்பார்
பாகு சமைப்பார் வட்டமைப்பார்
பாத்தி வகுப்பார் களந்தொகுப்பார்
பாடி நடுவார் விதையிடுவார்
குரம்பை யுடைப்பார் மடையடைப்பார்
கூலி கொடுப்பார் பேரர்ப்படுவார்
குமுதங் கொய்வார் கரைசெய்வார்
குவளை களைவார் சேறளைவார்
கரும்பு கழிப்பார் பழங்கிழிப்பார்
கதிர்சூ டெடுப்பார் கணைதொடுப்பார்
கலப்பை நிரைப்பார் திரைதிரைப்பார்
கால்வாய் மறிப்பார் தாள்பறிப்பார்
வரம்பு குறிப்பார் ரொலி படங்காப்
புகலிப் பெருமாள் வருகவே
வடநூற் பெருமாள் தமிழ்பெருமாள்
மறையின் பெருமாள் வருகவே.

5. தென்றிக் கிலங்கு மலைத்தமிழின்
செல்விச் செந்தேன் முகத்தகன்ற
தெய்வப் பொன்னித் திருநதியிற்
செழுநீ ராடிச்செங் கழுநீ

றொன்றிச் செந்தா மரைமலர்த்தி
யுயருங் கமுகி னறும்பாளை
யுழக்கிப் பகலின் போதெல்லா
மங்கே யுலாவி யுயர்மகர
வென்றிக் கொடிவேள் தனக்கெடுத்த
திங்கட் கவிகைக் கதிர்வீச
வீசுங் குமுதப் பெரும்போதின்
வேரின் மணந்த பசுந்தென்றல்
மன்றில் புகுந்து விளையாடும்
புகலிப் பெருமாள் வருகவே
வடநூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள்
மறையின் பெருமாள் வருகவே.

6. படிக்குந் தெய்வத் தமிழ்மதுரைப்
பதியிற் கனலைப் புனல்செய்யும்
பச்சைப் பதிக முடையவர்பாற்
பச்சை மாலை நச்சரவு
முடிக்கும் பெருமாள் அரத்துரையின்
முத்துங் குடையா அரத்துரையின்
முடியாச் செம்பொன் கிழிபெற்ற
முனிவர் பணிவா ரணமொதுங்
அடிக்கும் புரவி யரவிசூழன்
றண்டம் பொருதக் கதிர்மாடத்
தரம்பை யனையார் கைக்கமலத்
தஞ்சொற் கிளிகள் திருப்பதிகம்
வடிக்குங் கனக மறுகுசூழ்
புகலிப் பெருமான் வருகவே
வடநூற் பெருமாள் தமிழ்ப்பெருமாள்
மறையின் பெருமாள் வருகவே.

7. முருகு கதிரில்விரி முளரிதரு தெரியல்
முருகு கனகபுயன் வருகவே
முதலி மறைமுதலி கமல மகள்முதலி
முனிவர் தவமுதலி வருகவே

அருகு மலரயனு மரியு மிடனுமையை
யணையு மரன்மதலை வருகவே
அலைய வருபுனலி லனலி லுரையழியு
மமணர் வயிறுளெரி வருகவே
சிறுகு மிடையசைய வளக மசையவொளி
சிதறு தரளவிட மசையவார்
திகழு முலையசைய வுயிர்க ளசையவிழி
செருகு மகரகுழை யசையமா
மறுகு தொறுமகளி ரசைய் வசையவரு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே.

8. சுட்லை யிடமுமிகு சுருதி மறையுமெழு
துழனி தருமலகை யின்முனீர்
சுழலு முடியுமுடி செருகு பிறையுநிறை
மதானியை யுதவுதம ருகமும்வார்
கடலின் விடமும்விட முடைய மிடறுநடை
கரிய தொருதவள விடையுமா
கரியி னுரியும்விரி யரவு மினிதுடைய
கயிலை மலையின்மகன் வருகவே
யுடலை யடுபகழி மதனி னினிதுபெற
வுரைப யவன்மனைவி பெறவிடா
வொளியை யிலகுமுது முளரி வனிதைபெற
வுலகை விழியிணைகள் பெறவாரோ
மடலை யிளைஞர்பெற மகளி ரழகுபெறு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே.

9. இளைய வறுசமய முருட ருரைசிறுக
விறைவ ருரைபெருக வருகவே
இகலி யுலகுபொரு கலியின் வலிதளர
வியலொ டிசைவளர வருகவே

அளையு மடியவரை யமார் கிளைவனைய
வரச னுடல்நிமிர வருகவே
யழகு துவருடைய பிடகன் முடிகுறைய
வரிய மறைநிறைய வருகவே
விளையவளை ஞிமிறுபுதிய விசை வழி
விரகி னொடுமுரல முரலவான்
வெளியு மிருளவிரு ளகல நிழலுலவி
வினைசெய் விழியிளைஞ ருயிரெலாம்
வளைய மகளிர் சிலைமதளை யரசிலிடு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகு தமிழ்விரகன் வருகவே.

10. கலியின் வலிபொருத நினது புகழ்தவிர
வொருவர் புகழெனது செவிபுகா
கருத வரியவிரு சரண மலர்தவிர
விதய மொருநினைவு கருதிடா
வொலிகொள் புகலிவலம் வருவ தொழியவினி
யொருவ ரிடம்வகையி னிடைசெலா
வுனது திருநிலையை யறியு மெனதுவிழி
யொருவ ருருவறிய விமையெடா
பலிகொள் சமண்முடுது நினது பெயர்தவிர
வொருவர் பெயரெனது மொழிபட
படியி லுனைவளையு மெனது தலையமர்
பலரு மிகவரினும் வனைவுறா
வலிய வெமைவினவி யடிமை கொளவமையும்
வருக மறைமுதலி வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
பருகுதமிழ் விரகன் வருகவே.

11. அகது முதுபரவை பொழியு முலகுதனில்
அரிய பெருமைவர வருகவே
அரிய தரளவொலி பெருகு திருநிழலின்
அமரு மழகுவர வருகவே

மிகவு மமணர்பொரு மவையி னவரவர்கள்
வெளியும் விரகுவர் வருகவே
வெளிகொள் குவளையிதழ் நயன வனிதையுடன்
விடையிறைவன் மகன் வருககே
யிகலு மிருருபுருவம் வளைய வளமுகட
னிதய கமலமுகை புதையவாய்
இதழிநிற முடைய விளைய குலைகவர
மிடையு மிடைதுவள வெழுதொணா
மகளிர் மகிழ்நரொடு கலவி யமணிபுகு
புகலி வருகுரிசில் வருகவே
மலையின் மகளமுத கலச முலையருவி
கருகு தமிழ்விரகன் வருகவே.

அம்புலிப் பருவம்

1. கரிய பீலியு மருகர்தந் தலைகளும்
பாய்களுஞ் சுறுநாறக்
காதும் வெப்பினாற் பட்டகண் கலக்கமுங்
கண்ட குட்கண்சாத்தி
வரிகொள் வார்கழல் நின்குலத் தரசன்மேல்
மன்னுகூ னுடன்தீர்த்து
வாழ்வு தந்தவ னென்பது முணர்திலை
மதியிலா யதுநிற்கப்
பரிய போர்வையாற் சீவரந் தாங்கிய
பவுத்தனைத் தலைவீழப்
பார்த்த கோபமின் றுன்னையும் பார்க்கிலோர்
பார்வையிற் பணியுண்டோ
அரிய நாயக னுடனினி தாடுதற்
கம்புலி வருவாயே
அழுது வாழ்வுதந் தருளின னழைத்தன
னம்புலி வருவாயே.

2. வாவுண்புனல் வளவயற் றழுவிய
மருகல்மா னகர்தன்னில்
வணிக னைப்பணி யெயிறுகொண் டுயிருண்
மாண்டநாள் வணிகேசன்

தேவி புண்படு நெஞ்சுடன் படுதுயர்
திருமலர்க் கண்சாத்தித்
திரிய வாருயிர் கொடுத்தவ னவன்திரு
வடியிணை வீடாமே
கூவு தெண்டிரை கடந்தநாள் நின்மொழிக்
கோளினாற் றமதாகங்
குறைந்த நாகங்க ளிரண்டும்வந் துன்னுடல
கூடவுன் றுமிழ்ந்தாலும்
ஆவு யுன்னதா மாகமு முன்னுதாம்
அம்புலி வருவாயே
அழுது வாழ்வுதந் தருளின னழைத்தன
னம்புலி வருவாயே

3. உரைசெய் கோல்பிடித் தூன்றுவர் ரின்றியே
ஓடத்தை வருகென்றான்
உயர்ந்த வாண்பனை பெண்பனை யாகவு
மொருவிசைக் கண்பார்த்தான்
திரைசெய் வார்புனல் நகைகையி னெதிர்செலத்
தன்திரு வேடிட்டான்
செய்ய பாலகன் செய்யுமிச் சேதிகள்
யாவர்குந் தெரியாது
விரைசெய் தாமரைக் கண்களால் நின்குறை
மேனியைப் பார்த்தாள் நின்
மேல்வ ரும்பழி கிடக்கநீ தூயையாய்
விளங்காலாம் விண்ணோருக்
கரச னாகென விடுக்கினும் விடுக்குமின்
றம்புலி வருவாயே
அமுது வாழ்வுதந் தருளின னழைத்தன
னம்புலி வருவாயே.

4. தேன லம்புதண் கொன்றைதுன் றியசபைத்
தேவர்கள் மணவாளன்
செம்பொன் மேனியைப் பகிர்ந்து கொண்டிடதவன்
திருமுலைப் பெருகும்பால்

ஞான முண்டுதென்தெண் டிரைப்புவிப் பரப்பினில்
நடத்திய றுபத்து
நாலு வண்கலை நிரப்பிய முனியவன்
நரந்தைநாண் மலர்நாறும்
கான லங்குறை காடுதோய் மதர்விழிக்
கவுரியர் பிரிவின்கண்
கண்ட கண்டிட மெங்குநின் றேங்கிடக்
கழிவிலாப் பெருமான்முன்
னான நின்கலை குறைவற நிரம்பலா
மம்புலி வருவாயே
அழுது வாழ்வுதந் தருளின னழைத்தன
னம்புலி வருவாயே.

5. கந்த னாரையும் தமையனா ரையும்பெறு
பேதையும் பெம்மானுங்
கழிவி லாதபே ரின்பே யினிதுறக்
கடையுகப் பெருவெள்ளம்
வந்து கோலுநா ளுநலகெலாந் தனித்தனி
மயங்கவு மயங்காது
மன்று தோணியாய் மிதந்தவூ ரிவன்பதி
மாலுநான் முகனும்பேர்
இந்தி ராதியுஞ் சுரர்களு முனிவரு
முலகுளோ ரெல்லோரு
மெங்கு ளார்கொலோ வென்னவப் பிரளப
மின்னமும் புனல்கோக்கு
மந்த நாளினுந் தோணியைப் பற்றலா
மம்புலி வருவாயே
அழுது வாழ்வுதந் தருளின னழைத்தன
னம்புலி வருவாயே.

6. தழைத்த சோலைசூழ் மயிலையம் பதிதனிற்
சண்பகப் புதுக்கொம்பில்
சாரும்வில்விடந் தீண்டலு முயிர்விடுந்
தந்தைதன் றிருவென்பு

குழைத்த சந்தகில் எவிய குங்குமக்
சொங்கைக ளுடன்செம்பொற்
குடத்தில் வந்தெழச் செந்தமிழ்த் திருவிசைக்
கொத்தவன் இவனுன்னை
யிழைத்த வன்பணப் பாம்பின்வாய்ப் பட்டுநீ
யாருயி ரிழந்தாலும்
இனிய செஞ்சொலா லுன்னையு மிங்ஙனே
யாவரு மெதிர்கொள்ள
அழைக்க வல்லவ னுடனினி தாடுதற்
கம்புலி வருவாயே
அழுது வாழ்வுதந் தருளின னழைத்தன
னம்புலி வருவாயே.

வேறு

7. பிரச முந்திய மலரின் வந்தெழு
பிரமர் தம்பத மருளவோ
பெருகு தெண்டிரை நடுவு கண்டுயில்
லரிபெ ரும்பத மருளவோ
அரசெ னும்புகழ் நிலைபெ றும்படி
யமரர் தம்பத மருளவோ
அகல்வி சும்பினி லிருளொ துங்கிய
பகலவன்பத மருளவோ
விரைத்த தும்பிய பழன வெங்குரு
வுடைய செந்தமிழ் விரன்மேல்
விதிய டங்கலு மழிய வந்தெனை
வினவி யென்கிளைக் கிவரெலாம்
வரிசை தங்கிட வடுமை கொண்டவன்
வளமை தங்கிய புகலியான்
வருக அம்புலி வருக வென்றனன்
வருக அம்புலி வருகவே.

8. அளவில் தெண்டினர் பெருமை கண்டுகம்
தடுமை யென்றடி பணியெலாம்
அரிய வள்திரு விசைமு கந்திரு
செவிநி றைந்தறி வறியலாம்

இளைய மங்கையர் வதன சந்திர
ருறவெ னும்படி திரியலாம்
இரவெ ழுந்து பகலொ துங்கிய
தெனவ ளருங்குறை தவிரலாம்
ஒளிம ழுங்கிட முனியி ரும்பழி
யுலதெ னும்படி புகுதலாம்
உலகி லுன்குல வரசெ னும்படி
யுடல்வ ளைந்தது நிமிரலாம்
வளைசொர ரிந்தன தரள மெங்கணும்
வளமை தங்கிய புகலியான்
வருக வம்புலி வருக வென்றனன்
வருக வம்புலி வருகவே

9. அடல்படுஞ் சதவிதழ்வி ரிஞ்சனை
வருக வென்றில னனுகொணா
வமர்செய் கஞ்சனை வினைசெய் வஞ்சனை
வருக வென்றில னலைகடா
முடையவெங்களி றுடைய வன்றனை
வருக வென்றில னிருளொலி
முதிர வந்தெழு கதிர வன்றனை
வருக வென்றில னுகுவெலாம்
இடைவி டும்படி நெடுகு சண்பக
வடவி துன்றிய முகையெலா
மிதழ்வி ரிந்ததி லொழுகு தண்புன
லலையெ றிந்தெழு கழனிவாய்
மடைவி டும்படி பெருகு சண்பைய
ரதிபன் வெங்குரு வுடையகோன்
வருக வம்புலி வருக வென்றனன்
வருக வம்புலி வருகவே.

10. கயறு கொண்டரி யயனொ டிந்திரர்
கண்மட டங்கலு மகரமேய்
கடல்க டைந்தமு துணவி ரும்பிய
கலதி யின்கணோர் பகையினா

லெயிறு கொண்டுன துடல்வி ழுங்குவன
னெவ ரும்படி வரவுநீ
டியபெ ரும்பணி யுடன்வ ரும்படி
பரிப வஞ்செய லருமையோ
வெயிற ரும்பக லிரவு தந்தலை
மயிர்பி டுங்குதல் தொழிலதாய்
விழும மண்கிளைகரிச றும்படி
விரக றிந்துல குடையதாய்
வயியறு வந்தெனை யடுமை கொண்டவள்
வளமை தங்கிய புகலியான்
வருக வம்புலி வருக வென்றனன்
வருக வம்புலி வருகவே

சிற்றில்

1. சுழியா லெரிக்குந் திரையுகைத்த
சூல்வெண் சங்கு நீலமலர்க்
கழியால் வந்துவயல் புகுதுங்
காழிக் கரசே முலைசுரந்த
மொழியான் முடியாப் பரம்பொருளை
முன்னே காட்டி யுலகமெலாம்
அழியா வகைவந் தாட்கொண்டா
யடியேஞ் சிற்றில் சிதையேலே.

2. சுழிக்கும் பெருஞ்சா றலையெறிய
நூறா யிரம்பேர் சூழ்கரும்பு
கழிக்கும் பழனக் கழனிசூழ்
காழிக் கரசே வேதத்தைப்
பழிக்கும் பொல்லாப் பரசமயப்
பகட்டைப் பால்வாய்ப் பசுந்தமிழா
அழிக்கும் புகலிப் பெருமானே
யடியேஞ் சிற்றில் சிதையேலே.

3. பிடித்தார் பிடித்த கழியேநின்
றிட்ட பிண்டந்தின் றவமே
தடுத்தார் மெலியத் தமிழ்பாடுஞ்
சண்பைக் கரசே தளியேற்றின்
கொடித்தா னுடைய பெருமான்பங்
குடையா. னுடைய குலமகனே
அடித்தா மரையின் முத்துரைப்ப
அடியேஞ் சிற்றில் சிதையேலே.

4. சாதித் தெமது பாவமெலாந்
தள்ளித் தள்ளா டாவகையே
வாதித் தடியா ரடிமைசெய்ய
வழியாட் கொண்டபெருமானே
சோதித் தயன்மால் தேடரிய
தோன்றாப் பொருளைத் தோற்றுவித்த
ஆதித் தயனே தமிழ்க் கொழுந்தே
யடியேஞ் சிற்றில் சிதையேலே.

5 வழுதி வெதுப்பு மவன் கூனு
மாற்றி மண்மே லொருநாளும்
பழுதி லாத திருநீறும்
பஞ்சாக் கரமும் நிலைநிறுத்தி
யெழுதொ ணாத நாண் மறைக்கும்
மடியேங் களுக்கு மெல்லார்க்கும்
அழுது வாழ்வு தந்தோனே
யடியேஞ் சிற்றில் சிதையேலே.

வேறு

6. வருகதிர் விட்ட வெழுபரி வழியை
விலக்கியெழு பொழில்
முருகொழு கொச்சி வளநகர் முதல்வ
தலத்தி னொடுபொரு
மொரு கலிவெற்றி யிதுவல வுலகி
னிடுக்க ணிதுவல
ரிருக்கை யிதுவல வடியவர்
சிற்றில் சிதையேலே

7. பழிகள் பெருக்கி மயிர்பறி யழகு
முருட்டு வமணரை
வழிவழி கட்டி யுயர்கழு மரத்தி
லிருத்தி யழல்புக
விழிகள் சிவக்கும் வழுதிதன் விதியை
விலக்கி யுடல்வளை
வழிய நிமித்த தவ முனியடிவர்
சிற்றி லழியேலே

8. எழுபுவி பெற்ற திசைமுக னிலகு
சிரத்தில ரணிசை
மொழியு மிருக்கி லுயர்தவ முனிவர்
மனத்தில் முனரியில்
வழுதி நிமிர்த்தி முதுகினில் மகளிர்
கயற்க ணிணிணையினில்
அழகெழ வைத்த வடியிணை யடியவர்
சிற்றி லழியேலே

9. மறுவில் தமிழ்க்கோர் விளைபுயம்
மலருல குக்கு மனவலி
முறுகு கலிக்கு மதுபகை
முதன்மை மறைக்கோர் தனிமுதல்
துறுமம ணர்க்கோர் வயிறெரி
சுருதி யிசைக்கோர் புகலிடம்
அறுமுக வற்கோ ருறுதுணை
யடியவர் சிற்றில ழியலே.

10. வழிதி பிழைக்க வருளிய
மதுமல ரொத்த விணையடி
புழுதி படைத்த தெனவுமை
பொடியில் மிச்சைய யமனுடல்
கழுகு வெறுக்க வுயிரோடு
குழவி விருத்தி யுலகினை
யழுது வனத்த தவமுனி
யடியவர் சிற்றில ழியலே.

சிறுபறை

1. கருதரிய முத்தி தருகாரே
கலைகணிறை வுத்த மறைவேரே
பொருகலி துணித்த புகர்வாளே
புவனமகள் பெற்ற பெரும்பேறே
யரியவிசை கட்டு மடுபாகே
யதிமதுர மிக்க தெளிதேனே
திருமுலை சுரக்க வருபாலே
சிறுபறை முழக்கி யருளாயே

2. அளியின முழக்க வொருபாலே
வணிவளை முழக்க வொருபாலே
கிளியின முழக்க வொருபாலே
கிடையொலி முழக்கும் வளநாடா
குளிர்புன லகத்தி னிடையேவாழ்
குமுத மலரொத்த விதழாலே
தெளிதமி ழுரைத்த பெருமாளே
சிறுபறை முழக்கி யருளாயே

3. இனவணர் பொய்ச்சொல் பெருகாமே
எழுகலி தலத்தை நலியாமே
மனுவழி பிழைக்க நடவாமே
வழுதியுடல் வெப்பிலு ருகாமே
முனிவர் தவத்தை பொதியாமே
முதன்மறை வழக்கு மழியாமே
தினகரனை யொத்த வொளியானே
சிறுபறை முழக்கி யருளாயே

4. உவரெழு மளக்க ருவராமே
உயர்கதலி விட்ட கனியாறாய்
நவரத மளிக்கும் வயலாலே
நலமருவு கொச்சை நகரானே
அவகதயி லுற்று நலியாமே
அடியவர் பிழைக்க வருவாயே
சிவகதி யளித்த பெருமாளே
சிறுபறை முழக்கி யருளாயே

5. அருகரொடு புத்தர் குலகாலா
யழல்வலி தவிர்த்த தமிழ்வீரா
முருகுகமழ் கொச்சை வளநாடா
முழுகுதிறல் மிக்க கலிகோபா
பருவரையை யொத்த திரடோளா
பரனை யறிவித்த விரலாளா
திருவிசை யளித்த கனிவாயா
சிறுபறை முழக்கி யருளாயே.

வேறு

6. எழுதுவன கொடிகளாடு கொமிடை னேடுமறுகி
னெழில்கொள் னகத்திரு ளிள்வாய்
முழுமதிய மிகுபொழுது முலவிளை ஞர்கள்வதன
முளரியலர் கொச்சை நகராய்
வழுதிதெரி தருதமிழும் வளருமிய லிசைநடமும்
வடமொழியு மிக்க பொருள்சேர்
செழுமறையு மழகுபெற வழுததிரு நிலையழகு
சிறுபறை முழக்கி யருளே

7. புவனமுழு துடையதிரி புரையமலை விமலைமுலை
பொழியமுது தருந்து புதல்வா
தவனகுல பதிமகட் னிதயமகிழ் வுரமதுரை
தனிலமண றுத்த சிறுவா
அவனிமுத லுலகமுழு தடையவினரு ளியவயனு
மரியுமறி தற்க ரியதோர்
சிவனையிவ னெனவிரலி னுதிகொ ளியமுனிவ
சிறுபறை முழக்கி யருளே

8. முறுகுதழ லிடைகுளிர மலைகடன் முலைகுலவு
மொழி யெழுதிட் டுநதிசேர்
குறுகியெதிர் செலவமணர் வயிறுளெரி செலவினிமை
கொளுவிய லுரைத்த முனிவா
அறுகுநிறை மலரிதழி யலையினதி நகுதலையொ
டரவுவெள் ளருக்கி னுடனே
சிறுகுபிறை பொதிசடில முடியிறைவர் தருபுதல்வ
சிறுபறை முழக்கி யருளே.

9\. வருநெறியி லமணர்கழு வினிமடிய வழுதியுடல்
வளைவது நிமிர்த்து லகுலோர்
கருநெறியை யகலவரு ளதிமதுர கவிதைதரு
கவுணியர் குலக்கு ரிசிலே
ஒருநெறியை யருள்பரனு முமையுமிமை யவர்கிளையு
முனதுபதி கொச்சை யுடன்வாழ்
திருநெறியு மடியவரு மறையமுய மிகவினிது
சிறுபறை முழக்கி யருளே.

சிறுத்தேர்

1\. கோடு படைத்த வகிற்பல காடு
முறித்து முகிற்படலங்
குத்திமலைத் தலைதததி மணித்திரள்
கொள்ளை முகந்துபணிச்
சேடன் முடிப்பிடர் வைத்தலங் குழி
யக்குதிக் கொண்டுவணச்
சேவ லுகைத்தவ னென்னநிலத்தை
யகழ்ந்து நிகழநதுவிடா
பாடு பணிப்பிண்ட பாய மதத்தடல்
பாய வனக் கொடியோர்
பள்ளி யெடுத்தெதிர் முள்ளியி
யக்கரை யிற்செலவென்
றோட மழைத்த பசுந்தமி ழாளி
யுருட்டுக சிறுதேரே
யுலகுடை யாளுத வுந்தனி யானை
யுருட்டுக சிறுதேரே.

2\. தக்க வரைப்பணி கொண்ட வரைக்கழல்
தந்தவ ரைக்கதிர்வாள்
தானவ னுக்கருள் செய்த வரைப்புர
மான தழற்புகவே
நக்க வரைத்தனி நட்டு வரைக்கன
கக்கிரி பெற்றவர்பால்
நல்ல வரைச்சிலை வில்லவ ரைக்கரு
நாரண னுக்கரிதா

மிக்க வரைக்கம லத்தவ ரைத்தலை
கொண்டவ ரைப்படிஆழ்
வேலை விடத்தினை யுண்டவ ரைக்கதிர்
பாலை நெய்தலுமே
யொக்க வுரைத்த பசுந்தமி ழாளி
யுருட்டுக சிறுதேரே
யுலகுடை யாளுத வுந்தளி யானை
யுருட்டுக சிறுதேரே.

3. திண்மை படைத்த கயற்கொடி மாறன்
வெதுப்போடு கூனிமிரச்
செய்த மருந்து செழுந்தமிழ் வல்லி
தழைக்க விருத்தியதோ
வெண்மை படைத்த வெலும்புட லாக
நிறுத்திய வேதகளார்
வேத முடித்த பழம்பொரு ளுண்மை
விளைந்தெழு வித்தகலா
வண்மை புதுக்கிய கற்பக மன்பர்கள்
வைத்த சரக்கறைஆழ்
வல்லம ணர்க்கோர் வழிப்பகை யீசன்
மனத்து மகிழ்ச்சி விடாது
உண்மை விளைத்த சிவக்கலி கோப
னுருட்டுக சிறுதேரே
யுலகுடை யாளுத வுந்தனி யானை
யுருட்டுக சிறுதேரே.

4. பொருளி லகத்தொடு வருமொரு புத்தன்
முடித்தலை யுருளநிலம்
பொங்கு கருங்கலி நரகர் பிலக்குழி
புக்குரு ளத்திருநீ
றருளது பெற்றது வார்பிணி யாகவு
மயடி யுருள நிலத்
தாணுரு விற்பனை பெண்ணுரு வாதய
னிற்பழ முருள மறைக்

குருளை பயப்பட வெங்கனல் போலழல்
பொங்கு கொழுந்தெழுசெங்
குருதி படைத்துல கஞ்ச விட்டெழு
கோல முடைக்கொடியோன்
உருள வுருட்டிய சேவகன் மைந்த
னுருட்டுக சிறுதேரே
உலகுடை யாளுத வுந்தனி யானை
வுருட்டுக சிறுதேரே

5. ஆதி யுகந்தனி லன்னமு மேனமும்
அன்று தலக்கரிதா
அங்ஙன னைப்புற விங்ஙனெக் கருள்
செய்தவ னவ்வுருவிற்
பாதி யுகந்தன சீதள நித்தில
மாலை முலைக்கலசப்
பாலினை வெங்கரு மானகர் நின்று
பரிந்தமு துண்டமுதாய்
வேதமு மங்தமு மாதி புராணமு
மெய்த்தமிழ் நூல்களினால்
வேலை பொழிந்தன சோலை ளெங்கும்
விளங்க விளங்கவிரித்
தோது தலன்றி யுணர்ந்தருள் பந்த
யுருட்டுக சிறுதேரே
உலகுடை யாளுத வுந்தனி யானை
யுருட்டுக சிறுதேரே.

6. கருமா முகிற்படல முழுநா வகிற்பணைக
ளொடியா விடிக்கு ரல்கள்போற்
கதறா மதக்களிறு சிதறா மலைத்தலைகள்
கடவா விசைப்ப ரவைசூழ்
மருமா மடற்கமுகை வளையா மலர்க்கமல
மடுவூடு புக்கு மகிழா
வருகா விரித்திவலை வயல்தாவு கொச்சைதிகழ்
வளநாட மிக்க வொளிகூர்

பருமா மருப்பிகை நுரைவாய் குதட்டிவரி
வளைநீ ரளக்கர் புடைசூழ்
படிமா கூணத்தளவு நிலைபேர வெட்டரிய
படர்சோதி நச்சி நெடுநாள்
திருமா லளப்பரிய பெருமா னளித்தமுனி
சிறுதே ருருட்டி யருளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருருட்டி யருளே.

7. பருவே ரகிற்குறடு தருசேற தப்பிமிகு
பணிநீ ருழக்கு மிளைஞர்
பழியே துடக்குமிள முலைகாண நிற்கலிவை
படிறே முடிக்கை தவிரா
வுருவே படைத்துலகு உறைகா முதிர்க்குடிலின்
உயிர்பேணி நிற்க நினைவே
வொளீயீ ரெனப் புனையு மணிநூ புரத்தொகுதி
யொளியா ரரத்த விதழார்
மருகவே கழிக்கும்வளை மலரே யெனப்பகழி
வடியே யெனப் பகருமா
வடுவே யெனக்கொடிய கடுவே யெனத்திரியும்
விழியால் வளைத்து மடவார்
செருவே துவக்கிவரு பிரமா பிரத்ததிப
சிறுதே ருருட்டி யருளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதேரு ருட்டியருளே.

8. வரையாஃ மகட்கரசு நடுமாடு பொற்பொதுவின்
மணியரா நச்ச ரவொடே
மதயானை யர்ச்சனைசெய் பதிமீது பெற்றதொரு
வளரா மவர்க மறைநூல்
அரையா லெனப்பரவு சிவன்மேவு கச்சியினில்
அறியா விளக்கி வையெலாம்
அடையே படைத்ததமிழ் விரகால்முருட் டுகமுடை
யமண சறுத்த களிறே

யுரையா விருட்டுருவ விடமான திட்டுமழ
லறுநீறு வைத்த மெதிரே
உயரானை விட்டுமிவை பலியாமல் மிக்கசிலை
யுறுது னொடொகக் விடுநாள்
திரையார் கடற்கரையி லினிதேறு மப்பாதுணை
சிறுதே ருருட்டி யருளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருருட்டி யருளே.

9. இவனே வெதுப்பகல விடுவா னெனச்சமண
ரிதழ்வே யுரைக்க வமுதா
லெழுகா விரித்துரைவன் மகளார்த மொக்கலையி
னினிதா வெடுக்க வரசாம்
அவனே மதிக்கவவன் முதுகூ னிமிர்த்துமவ
னருநோய் தவிர்த்து மடியோம்
மடியே துதிக்கும்வகை யருணீ றெமக்குதவு
மழகா வடைத்த செறுதாள்
தவனே திறக்கையணி யெனவே மறைத்தலைவர்
தமிழ்நா வினுக்கரை யனார்
தமிழ் பாடிடக்கதவு தனையே முதற்பரவு
மதுநா லடைத்த படியே
சிவனே யடைத்தருள்செ யெனவோது சொச்சை
சிறுதே ருருட்டி யருளே
திருவான வட்டிநிறை திருவான மெய்க்குழவி
சிறுதே ருருட்டி யருளே.

10. அலையார் புனல்கருகு பிறையாய் முடித்தபிறை
யருகே யெருக்க டவியாய்
அடரா வெருக்கினிடை யர்வா யிருக்கமர
வருகே கடுக்கை மலரா
மிலையார் கடுக்கைமல ரருகே நகைத்தபல
தலையால் விரித்த சடையாய்
இமவான் மக்கொடிதன் மணவாள னெப்பரவு
மிசையாத் தமிழ்க்க ரவுநீர்

நிலையாய் நிலைக்கருகி மலரா மலர்க்கருகு
ஞிமிராய் ஞிமிற்ற றருகுமா
நிழலாய் நிழற்கருகு வளையாய் வளைக்கருகு
மணியாய் மணிக்க ருகுவெள்ள
சிலையாய் விளக்குமிகு பிரமா புரத்ததிப
சிறுதே ருட்டி யருளே
திருவான வட்டிநிறை திருஞான மெய்க்குழவி
சிறுதே ருட்டி யருளே.

11. அம்புராசியுந் தனிப்பட விழிவிழி
தாலிலை வறிதாக
வாச்சி பார்ந்தா மடியினு முரலினும்
போதவோர் தாம்பினா லடர்ப்புண்டு
தம்ப மால்வரை வயிற்றிடை வேக
துடாரளிப்படத் தானவர் குறவேந்தன்
தடங்கிரிப் பெருமார் பிடந்தவன்
குடர்தண் டுழாயுடன் சாத்த
வெம்புலால் கமழ்குருதியஞ் சேற்றிடை
வெண்ண கைத்தமிழ்ப் பாடி
மிசைத்த சிங்கத்தின் வெருவருந் தோற்றத்தின்
வெள்ளுகிர் நதியுள்ளச்
சிம்புளாகிய பெரியவன் றிருமக
னுருட்டுக சிறுதேரே
தேவர் கோமகன் தேவர் சேனாபதி
யுருட்டுக சிறுதேரே

வெண்பா

சாற்றரிய காப்புசெங் கீரைதால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய
அம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
பம்புசிறு தேரோடும் பத்து.

துணை நூற் பட்டியல்

1. அச்சும் பதிப்பும் - மா. சு. சம்பந்தம், மணிவாசகர் பதிப்பகம், (டிச-1997) பாரிமுனை, சென்னை

2. சுவடிப்பதிப்பியல் வரலாறு - இரா. இளங்குமரன் மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், (நவ-2001)

3. கதிரைவேற்பிள்ளையின் தமிழ் மொழி அகராதி - சாரதா பதிப்பகம், சென்னை, அக்டோபர் 2003

4. பிள்ளைத்தமிழ் அமைப்பும் அழகும் - தே.சொக்கலிங்கம், தேவநாதன் பதிப்பகம், 23, தையல் நாயகி இல்லம், எட்டாவது வீதி - தென் விரிவு, சுப்பிரமணியபுரம், காரைக்குடி - 3.

செய்யுள் அகரவரிசை

பாடற்முதற்குறிப்பு	பருவம்	பாடல்எண்
அகருவட்டக்லச	செங்கீரை	13
அகலுமுது	வாரானை	51
அமிழ்தாரும்படி	சிறுத்தேர்	90
அயலுரை	செங்கீரை	17
அருகரொடு	சிறுபறை	85
அருகுமுது	தாலப்பருவம்	30
அருவிமுகக்	சப்பாணி	33
அலையார்	காப்பு	3
அலையார்	சிறுத்தேர்	100
அலையுண்	முத்தம்	41
அளவில்தெண்	அம்புலி	68
அளியின்	சிறுபறை	82
அறுபதந்	சப்பாணி	38
அழுதாரும்	தாலப்பருவம்	25
அடல்படுஞ்சத	அம்புலி	69
ஆதியுகந்தணி	சிறுதேர்	94
இவனே	சிறுத்தேர்	98
இழிந்த	காப்பு	7
இனமொரு	தாலப்பருவம்	27
இனவமணர்	சிறுபறை	83
இனிதாகக்	தாலப்பருவம்	21
உருவைப்புற	தாலப்பருவம்	23
உரைசெய்கோல்	அம்புலி	63
உலவுசெஞ்சுட	சப்பாணி	36
உவமை	முத்தம்	48
உவரெழு	சிறுபறை	85
எருக்கே	முத்தம்	42
எழுதுவன	சிறுபறை	86
எழுபுவி	சிற்றில்	78
ஒருமலைச்	செங்கீரை	12
கடலலையி	காப்பு	5
கடியவெம்பிற	சப்பாணி	9

கஞ்சரனத்	செங்கீரை	15
கந்தனாரையும்	அம்புலி	61
கயறுகொண்டரி	அம்புலி	70
கருதரிய	சிறுபறை	81
கரியபீலியு	அம்புலி	61
கருமாமுகிற்	சிறுத்தேர்	95
கலியின்வலி	வாரானை	59
கழுமலந்திரு	சப்பாணி	40
காதித்	சிற்றில்	74
கார்மேவுந்	காப்பு	1
கோடுபடைத்த	சிறுத்தேர்	90
கோத்துப்படு	முத்தம்	44
கோலொன்று	செங்கீரை	11
கையினால்	செங்கீரை	14
சடங்கின்	வாரானை	51
சதவித	தாலம்	26
சிகராலையம்	வாரானை	50
சுடலையிட	வாரானை	57
சுழிக்கும்	சிற்றில்	72
சுழியாவெறிக்	சிற்றில்	71
செய்யமலர்த்	காப்பு	8
சொலைபயிலும்	சப்பாணி	35
தக்கவரைப்பணி	சிறுத்தேர்	91
தருமத்தின்	காப்பு	10
தழைத்தசோலை	அம்புலி	66
திண்மைபடை த்	சிறுத்தேர்	92
துங்கமதகிற்	சப்பாணி	32
தென்றிக்	வாரானை	54
தேனலம்புதண்	அம்புலி	64
நடிக்கும்	முத்தம்	45
நிமிரும்வெங்	சப்பாணி	37
நேர்மதற்குப்	சப்பாணி	34
படிக்குந்	வாரானை	55
பிடித்தார்	சிற்றில்	73
படைவணிகர்	தாலம்	28
பிணமுடைச்	முத்தம்	46

பரம்பை	வாரானை	53
பிரசமுந்திய	அம்புலி	67
பருவேரகிற்	சிறுத்தேர்	96
பழியுள்	சிற்றில்	77
பாளைக்	வாரானை	52
புலகமெய்த்	முத்தம்	47
புவனமுழு	சிறுபறை	87
பொங்குதே	சப்பாணி	31
பொருளில	சிறுத்தேர்	93
மதுரக்கவி	தாலம்	29
மறுகு	சிற்றில்	79
முருகனலிடை	சிறுபறை	88
முறுகுகதிரில்	வாரானை	56
முலையானவை	காப்பு	9
முளைவறு	வாரானை	58
யற்பயிசை	காப்பு	4
வசையற	செங்கீரை	18
வடவாவினுச்சி	காப்பு	6
வருகதிர்	சிற்றில்	76
வருநெறியில	சிறுபறை	89
வருபகை	செங்கீரை	20
வழிதி	சிற்றில்	80
வழுதிக்	சிற்றில்	75
வழியுங்	முத்தம்	43
வரைவான்	சிறுத்தேர்	97
வரைசிலையாம்	செங்கீரை	16
வாராமே	தாலம்	24
வாவுதண்புனல்	அம்புலி	62
வண்டரவத்	தாலம்	22
வியன்மது	காப்பு	2
விரிகதிரோன்	செங்கீரை	19
வினையுடைப்	முத்தம்	49

அருஞ்சொற் பொருள் விளக்கம்

அகரு	- அகில்
அகிலவலயம்	- எல்லாவுலகமும்
அத்தி	- யானை
அமண்	- சமணர்
அமளி	- படுக்கை
அம்பரம்	- ஆகாயம்
அலக்கண்	- துன்பம்
அறுபதம்	- வண்டுகள்
ஆகம்	- உடல்
ஆண்தாலம்	- ஆண்பனை
இரவி	- சூரியன்
உடுமுகடு	- நட்சத்திர மண்டலத்தின் உச்சி
உததி	- கடல்
உரறா	- முழங்கி
எக்கர்	- மணற்குன்று
எரி	- நெருப்பு
ஏற்றின்கொடி	- இடபக்கொடி
கதிர்	- கிரகணம்
கமலத்தார்	- தாமரைப் பூமாலை
கழுது	- பேய்
கழுமலம்	- சீகாழி
கன்னல்	- கரும்பு
காணி	- புரக்க
குடபாகும்	- மேல்பாகம்
குணபாகம்	- கீழ்பாகம்
கிடை	- வேதமோதுமிடம்
குரம்	- குதிரையின் காற்குளும்பு
கோல்	- செங்கோல்
சடங்கு	- விதி
சுடிகை	- உச்சி
சேவகன்	- காலசங்ககாரக் கடவுள்
சொக்கு	- பேரழகு
தத்தை	- பூம்பாவை
தமருகம்	- உடுக்கை

தவனகுலபதி	- சூரிய குலத்தரசனாகிய சோழன்
தாவடி	- போர்
தாழை	- தென்னைமரம்
தானவன்	- மீனக்கொடி
திகிரி	- சக்கரப்படை
துகிர்	- பவளம்
துவசம்	- கொடி
துழனி	- ஒலி
தெரிவை	- செட்டிப்பெண்
தோழும்	- தொழுவம்
நிசிசரர்	- அரக்கர்
பகழி	- அம்பு
பணி	- வாசகி என்னும் பாம்பு
பணை	- கிளை
பரவை	- கடல்
பிஞ்சாயவெண்மதி	- இளம்பிறைச் சந்திரன்
பிடகன்	- புத்தன்
பிரசம்	- தேன்
புற்படம்	- மரவுரி
பூகம்	- பாக்குமரம்
பூம்பணை	- அழகிய வயல்கள்
மகரகொடிவேள்	- மன்மதன்
மகராலயம்	- கடல்
மிதவை	- புணை
மறுகு	- தெரு
மாசுணம்	- பாம்பு
மிடி	- தரித்திரம்
மீகாமன்	- மாலுமி
முகற்படலம்	- மேகபடலம்
முனி	- தக்ஷமுனிவன்
முனிவினில்	- கோபத்தினால்
மூன்றழல்	- முத்திச்செல்வம்
ராகம்	- விருப்பம்
வங்கம்	- மரக்கலம்
வடகிரி	- மேருமணி
வாமன்	- அழகு
விரிஞ்சன்	- பிரமதேவர்

பிள்ளைத் தமிழ் பற்றிய நூற்பாக்கள் நிகண்டுகளும் பாட்டியல்களும்

(காலவரிசைப்படி)

சேந்தன் திவாகரம் (கி.பி.9)

ஆண்பாற் பிள்ளைப்பாட்டில் வகைப்பெயர்

'திங்களிரண்டில் தெய்வக் காப்பும்
ஐந்தாந்திங்களில் செங்கீரையும்
ஏழாந்திங்களில் தாலப்பாட்டும்
எட்டாந் திங்களில் இன்னமுதூட்டலும்
ஒன்பதாந்திங்களில் சப்பாணியும்
பத்தாந்திங்களில் முத்தங்கூறலும்
ஆண்டுவரையகவயின் ஈண்டுவருகென்றலும்
ஈரெண்டிங்களின் அம்புலிகாட்டலும்
இரண்டாமாண்டில் சிறுபறைகொட்டலும்
மூன்றாமாண்டில் சிற்றில்சிதைத்தலும்
நாலாமாண்டில் சிறுதேருட்டலும்
வைத்தமுந்நான்காண் டெல்லைவரையில்
கச்சிற்சுரிகை காமுறப்புனைதலும்
பெற்றியாண்பால் பிள்ளைப்பாட்டே.'
(பல்பொருட் கூட்டத்தொடு பெயர்த்தொகுதி - பக்கம் 309)

பெண்பாற் பிள்ளைப்பாட்டு வகைப்பெயர்

'ஆண்டுவரையகவயின் முன்னுரைத்தனவும்
மூன்றாமாண்டில் குழமணமொழிதலும்
ஐந்தின் முதலா ஒன்பதின் காறும்
ஐங்கணைக் கிழவனை ஆர்வமொடு நோற்றலும்
பனிநீர்தோய்தலும், சிற்றிழைத்தலும்,
ஊசலாட்டும்என் றிவையுள்ளிட்டு,
பேசியபெண்பாற் பிள்ளைப்பாட்டே.

(மேற்படி, ப.310)

பன்னிருபாட்டியல், இந்திரகாளியம் (கி.பி.9)

1. தோற்ற முதல்யாண் டீரெட் டளவும்
ஆற்றல் சான்ற ஆண்பாற் குரிய

(175)

2. காப்புமுத லாகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற் குரிய

(176)

3. அவைதாம்
பிள்ளையைப் பாடலில் பிள்ளைப் பாட்டாய்ப்
பிறப்பே ஓகை காப்பே வளர்ச்சி
அச்ச முறுத்த லுடன்செங் கீரை
தால்சப் பாணி முத்தம்வா ரானை
அம்புலி சிற்றில் குழமகன் ஊசல்
என்றனர் பிறவும் தொன்னெறி மரபின்
தத்தம் தொழிற்குத்தகுவன புகறல்.
எத்திறத் தோர்க்கும் உரிய என்ப
கொச்சகக் கலியொடு நெடுவெண் பாட்டே.

(194)

4. நெடுவெண் பாட்டின் முந்நான் கிறவாது
தொழிலொடு குறித்துத் தோன்றுஞ் செய்யுள்
ஒன்றுமூன் றைந்தே ழொன்பான் பதினொன்
றென்றிவை இவற்றின் இகந்தன இழுக்கே

(195)

5. பிறப்பே ஓகை பேணுறு வளர்ச்சி
சிறைப்பட அச்ச முறுத்தலொடு நான்கும்
ஆரா யுங்கால் ஐந்துமூன் றிடைவாய்
ஓரே ழொருபொருட் குயர்ச்சியிழி பொன்றே

(196)

பன்னிருபாட்டியல் பொய்கையார் (கி.பி.10)

1. பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே

(173)

2. ஒன்று முதல்யாண் போதினும் வரையார்

(174)

பன்னிரு பாட்டியல், பரணர் (கி.பி.10)

1. தொன்னிலை வேந்தர் சுடர்முடி சூடிய
பின்னர்ப் பெறாஅர் பிள்ளைப் பாட்டே
(177)

ஆண்பாற் பிள்ளைப் பாட்டில் அமைத்தற்குரிய நிலைகள்

2.காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகனன் றல்முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்
(178)

முன்னுற அமைத்தற்குரிய சுற்றத்தார்

தந்தையே தாயே பாட்டன் பாட்டி
முந்துற உரைத்தல் முறைமை என்ப
(179)

பெண்பாற் பிள்ளைப் பாட்டில் அமைத்தற்குரிய நிலைகள்

4.திருந்திய பெண்மக வாயின் விரும்பிய
பின்னர் மூன்றும் மன்னுநீக் கென்றனர்
(180)

5.சிற்றில் சிறுதேர் சிறுபறை ஒழித்து
மற்றவை மகளிர்க்கு வைப்ப தாகும்
(181)

பெண்பாற் பிள்ளைப்பாட்டுக்கு எய்தியதன் மேற் சிறப்புவிதி

6.சிற்றில் இழைத்தல் சிறுசோ றாக்கல்
பொற்பமர் குழமகன் புனைமணி ஊசல்

ஆண்டீ ராறதில் எழிற்காமன் நோன்பொடு
வேண்டுதல் தாலுள விளம்பினர் புலவர்

(182)

காப்பிற்குரிய கடவுளர்

7.திருமால் அரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேல் முருகன் வரிதி வடுகன்
ஏழுவகை மங்கையர் இந்திரர் சாத்தன்
நிதியவன் நீலி பதினொரு மூவர்
திருமகள் நாமகள் திகழ்மதி என்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே

(183)

காப்பின் முதற்கண் எடுத்துரைக்கும் கடவுள்

8.காப்பின்முதல் எடுக்கும் கடவுள் தானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தோன் ஆகும்

(184)

காப்பின் முதற்கண் திருமாலைக் கூற வேண்டியதன் காரணம்

9. அவன்றான்
காவற் கிழவன் ஆக லானும்
பூவின் கிழத்தியைப் புணர்த லானும்
முடியும் கடகமும் மொய்பூந் தாரும்
குழையும் நூலும் குருமணிப் பூணும்
அணியும் செம்மல் ஆக லானும்
முன்னுற மொழிதற் குரியன் என்ப

(185)

10. விரிசடைக் கடவுளும் வேய்த்தோள் எழுவரும்
அருளொடு காக்கவென் றறையுங் காலைக்
கொலையும் கொடுமையும் கூறா ராகிப்
பெயரும் சின்னமும் பிறவும் தோன்றக்
கங்கை திங்கள் கடுக்கை மாலை
மங்கல மழுவொடு மலைமகள் என்றிவை
விளங்கக் கூறல் விளம்பிய மரபே

(186)

11. ஒன்பது பதினொன் றென்பது காப்பே

(187)

12. அகவல் விருத்தமும் கட்டளை ஒலியும்
கலியின் விருத்தமும் கவின்பெறு பாவே

(188)

13. பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
தெள்ளிதிற் செப்பும் புலவரும் உளரே

(189)

14. முதற்கண் எடுக்கும் அகவல் விருத்தம்
எழுத்தின் பகுதி எண்ணினர் கொளலே

(189 அ)

உவகை அமைத்துப் பாடும் திறம்

15. நீணெறி உவகை ஆண்மக விற்கேழ்
ஐம்மூ வாண்டே அவர்முதற் சாற்றல்

(190)

பிள்ளைப்பாட்டில் ஆண்பாற்குக் கூறற்குரிய உவமை

16. பொங்குகதிர் இளம்பிறை புலியின் சிறுபறழ்
குஞ்சரக் குழவி கோளரிக் குருளை
அடலிள விடையே ஆறிரண் டாண்டின்
இடைநிகழ் உவமை எம்மனார் புலவர்

(191)

17. பெண்மக விற்குப் பேசுமிடத்து
மானின் கன்று மயிலின் பிள்ளை
தேனிந் இன்பத் தெள்ளாத் தேறல்
கரும்பின் இளமுளை சுல்லாக் கிள்ளை
இளந்தளிர் வல்லி என்றிவை எல்லாம்
பெய்வளை மகளிர்க் கெய்திய உவமை

(192)

18. இளங்கதிர்த் திங்கள் எல்லாருக்கும் உரித்தே

(193)

பிங்கல நிகண்டு (கி.பி.10)

1. பிள்ளைப் பாட்டுவாயின் முன்னம்
வெள்ளைப் பாட்டு வேதியர்க் குரித்தே

(1363)

2. நேரிசை யகவலுந் கொச்சகக் கலியு
மாரா யுங்கா லரசர்க் குரித்தே

(1364)

3. வஞ்சியு மின்னிசை வெள்ளையும் வணிகர்க்
கெஞ்ச லில்லா வியல்புடைத் தாகும்

(1365)

4. நெடுவெண் பாட்டும் நேரிசை யகவலுங்
கடியசூத் திரர்க்குக் கட்டுரைத் தனரே

(1366)

5. காப்புமுத லிசைக்குங் கடவு டானே
பூக்கமழ் தண்டுழாய் புனைந்தவ னாமவன்
காவற் கிழமைய னாத லானும்
முடியுங் கடகமு மொய்ப்பூந் தாரும்
குழையு நுதலுங் குருமணிப் பூணும்
அணியுஞ் செம்ம லாத லானும்
மன்னுறு பிரமனைத் தருத லானும்
முன்னுற மொழிதற் குரிய னாமெனப்
பன்னி யுரைத்தனர் பாவலர் தாமே

(1367)

6. பிள்ளைப் பாட்டுத் தெள்ளிதிற் கிளப்பிற்
றிங்க ளிரண்டிற் றெய்வங் காக்கென
இன்றமிழ்ப் புலவ ரியம்பிய காப்பு
மைந்தாந் திங்களிற் செங்கீரை யாடலு
மாறாந் திங்களிற் கூறுதல் கற்றலோ
டேழாந் திங்களி னின்னமு தூட்டலு
மெட்டாந் திங்களி னியற்றா லாட்டலு
மொன்பதாந் திங்களி லுயர்சப் பாணியும்
பத்தினோ டொன்றின் முத்தங் கூறலு
மாண்டு வரையி லிண்டுவரு கென்றலு
மதியீ ரொன்பதின் மதியை யழைத்தலு
மிரண்டா மாண்டிற் சிறுபறை கொட்டலு

மூன்றா மாண்டிற் சிற்றில் சிதைத்தலும்
நாலா மாண்டிற் சிறுதே ருருட்டலும்
பத்திற் பூணணி பன்னீ ராண்டினிற்
கச்சொடு சுரிகை காமுறப் புனைதலென்
றின்னவை பிறவு மாகு மவற்றுள்
முன்னர் மொழிந்த வொழிந்தவற் றோடும்
பெற்ற வாண்பாற் பிள்ளைப் பாட்டாம்
முன்னுறக் கிளந்த ஆண்டி னாள்வரை
இசைத்த பாட விருபாற்கு முரித்தே

(1368)

7. பேணும் சிறப்பிற் பெண்மக வாயின்
மூன்றா மாண்டிற் குழமண மொழிதலு
மைந்தின் முதலா யொன்பதின் காறு
மைங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றலும்
பனிநீர் தோய்தலும் பாவை யாடலு
மம்மனை கழங்கு பந்தடித் தாடலுஞ்
சிறுசோ றடுதலுஞ் சிற்றி லிழைத்தலு
மூச லாடலு மென்றிவை யுள்ளிட்டுப்
பேசிய பெண்பாற் பிள்ளைப் பாட்டே

(1369)

வெண்பாப் பாட்டியல் (கி.பி.12)

1. கண்டுரைக்கிற் பிள்ளைக் கவிதெய்வங் காக்கவெனக்
கொண்டுரைக்குந் தேவர் கொலையகற்றி -
ஒண்டொடியாய்
சுற்றத் தளவா வகுக்பொடு தொல்விருத்தம்
முற்றுவித்தல் நூலின் முறை.

2. முறைதருமூன் றாதிமூ வேழ்றாந் திங்கள்
அறைகநிலம் பத்துமாண் டைந்தேழ் -
இறைவளையார்க்
கந்தஞ் சிறுபறையே யாதியா மூன்றொழித்துந்
தந்தநில மோரெழுஞ் சாற்று.

3. சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து.

கலித்துறைப் பாட்டியல் என்னம் நவநீதப் பாட்டியல் (கி.பி.14) பிள்ளைத்தமிழ் காப்புக் கடவுளர்

1. பூவிற் திருவைப் புணர்தலிற் பொன்முடி பூண்கடகம்
மேவப் படுதலின் வெண்சங்க மாழி விரும்புதலிற்
காவற் கடவுளைக் கார்முகில் வண்ணனைக் காசினியோர்
பாவுக்கு முன்னே பகருவர் காப்பாப் பணிமொழியே.

2. விரிசடைப் பிஞ்ஞகன் வேய்த்தோ ளெழுவர்முன் காக்கவன்ன
அருள்பெறக் கூறி ரைரவர் செய்யும் கொலையகற்றி
உரியநற் கங்கை யுமையாள் மதியூர் விடைகடுக்கை
விரைமலர்த் தார்மற்று மங்கலமாக விளம்பினரே

3. பதினொரு மூவரும் பங்கயத் தோனும் பகவதியும்
நிதிமுத லோனும் பருதியுஞ் சாத்தனும் நீளமரர்க்
கதிபதி தானு மறுகத் தைங்கரத் தற்புதனும்
மதிபுனை வேணி வடுகனுங் காவல்செய் வானவரே.

பிள்ளைக்கவியின் பருவங்கள்

4. முற்றந்த காப்புச்செங் கீரைதால் சப்பாணி முத்தத்தொடு
மற்றந்த வாரானை யம்புலி வாய்ந்த சிறுபறையே
சிற்றில் சிதைத்தல் சிறுதே ருருட்டுதல் சேர்ந்தபத்தும் சுற்றத்தளவும்
கவிக்கெல்லை யாக்கொண்டு சொல்லுவரே.

பிள்ளைத்தமிழுக்குப் பருவ வரையறை

5. மூன்று முதலிரு பத்தொரு திங்கள் முடிவளவாய்த்
தோன்று நிலைபத்துஞ் சொல்லுவர் தோகையர் தங்களுக்கும்
ஆன்ற புகழ்ச்சிக்கு மவ்வகை யாமென்பர் ஐந்தேழென
ஏன்றநல் லியாண்டி னகவரை தானும் இயம்புவரே

6. சொன்ன சிறுபறை யேமுதன் மூன்றும் சுருங்கிவரும்
மன்ன விருத்தம் வருத்தவீ ரெண்கலை வண்ணச் செய்யுள்
அன்னவை யோரைம் பதில்ஃகா தெல்லை அறைவர்கற்றோர்
பொன்னு மணியுநற் போகமு மீன்ற புணர்முலையே.

பிள்ளைத்தமிழுக்கு ஆவதோர் புறனடை

7. சிறுபறை யேமுதன் மூன்றுந் தெரியிலப் பேதையர்க்குப்
பெறுவன வல்ல விளையனே யாயினும் வேந்தன் பெறான்
மறுவின் முடிசூடிற் பிள்ளைக் கவிகாப்பு மாலைமுன்னே
அறிபவ ரொன்பதும் பன்னொன்றுமாக அறைவர்களே.

பாரதிதீபம் (கி.பி.15)
பிள்ளைப்பாட்டு

1. திங்க. ளிரண்டினி லைந்தினி லேழினி லொன்பதினி
லங்கொரு பத்தொன்றிற் காப்புச்செங் கீரையமுதடன்றால்
தங்குசப் பாணிமுத் தங்கூற லாண்டு தனிற்புதல்வ
லிங்கெதிர் வாவெனல் பூச்சூட்டடல் திங்களோ ரெட்டினிலே.

ஆண்பிள்ளைப் பாட்டு

2. ஆண்டிரண் டுற்ற சிறுபறை கொட்ட லுணுகியமு
வாண்டினிற் கோழகந் தான்செய்தல் சிற்றிலழித்தலைந்தா
மாண்டின்மை யாடல் சுரிகைமெய் சேர்த்தலவையவையவ்
வாண்டினிற் பாடுத லாண்பிள்ளைப் பாட்டுக் கடைவதுவே

பெண்பிள்ளைப் பாட்டு

3. முன்னவை யாண்டின் முடித்தலவ் வாண்டெல்லை மூன்றுதன்னி
முன்னு கும்பக ளைந்தொட தெல்லையி னோங்குவில்வே
டன்னை வழிபட னீராடல் தண்கட லாடல்சிற்றில்
பன்னல் மணிசெ... பொன்னூசல் பெண்பிள்ளைப் பாட்டெடன்பரே.

பிரபந்தமரபியல் (கி.பி.15-1525)
பிள்ளைக்கவி

1. செறிகொலை நீக்கித் தெய்வம் கா(ப்பெ)னத்
தொகை(யளவு) வரையும் இசைவகுப் பகவல்
விருத்தந் தன்னால் வினவுமுறை காப்புச்
சாற்றுசெங் கீரை தால்சப் பாணி
வழங்கு (முத்தம் வாரா)னை அம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதேர் பத்தும்
ஈற்றில் மூன்றொழித்து ஏந்திழை யார்தமக்கு
உறுகழங்கு அம்மானை ஊசல் (அமைய)
மூன்றுமுத லிருபத் தொன்றனுள் ஒற்றைப்
பெறுமதி கொளலாம் பிள்ளைக் கவியே

பிள்ளைக் கவியின் பாடல்தொகை

2. இமையவர் வேதியர் இ(யல்புடையன)வசியர்
சூத்திரர் என்னச் சொற்றஐ வருக்கு
முறையே நூறு முதலுறு பான்வரை
கணிக்கும் பிள்ளைக் கவி(யின் தொகை)யே.

சூடாமணி நிகண்டு (கி.பி. 16)

1. சாற்று காப்பு செங்கீரை தாலே சப்பாணி முத்தம்
போற்று வாரனை யேயம்புலி சிற்றில் சிறுபறைப்பின்
ஏற்றிடுஞ் சிறுதேராமிப்பருவம் பத்தையுமிசைக்கும்
தேற்றுமாண் பிள்ளை பாட்டாசிரியஞ் சேர்விருத்தப்பாவே,

2. அரிவையர்க்கா கிலீற்றிறை மூன்று பருவமாகா
உரியதாங் கழங்கம்மானை யூசல் முன்னேழினொடு
வருமூன்றேயாதி மூவேழ் மதிகாறொற்றித்த மாதத்
திருபாலா ரையுங் கேட்பித்தலினிதைந் தேழாண்டுதானே.

(111-112)

3. காப்புக்கு முன்னெடுக்குங் கடவுடான் மாலேயாகும்
பூப்புனை மலரின் செல்வ புனைபவனாதலானும்

காப்பவ னாதலானுங் கதிர்முடி கடகத்தோடு
வாய்ப்பதா மதாணி பூணூல் வரிசையிற் புனைந்தலானும்

(139)

சிதம்பரப் பாட்டியல் (கி.பி.16)

1. *துறுகொலை நீக்கித் தெய்வக் காப்பாய்ச் சுற்றத்*
தொகையளவு வகுப்பகவல் விருத்தந் தன்னால்
முறைகாப்புச் செங்கீரை தால்சப் பாணி
முத்தம்வா ரானையம் புலியி னோடு
சிறுபறைசிற் றிற்சிறுதே ரிவையின் மூன்றுந்
தெரிவையர்க்குப் பெறாகழங்கம் மானையூசல்
பெறுமூன்று முதலிருபத் தொன்று ளொற்றை
பெறுதிங்க டனிற்பிள்ளைக் கவியைக் கொள்ளே

(மரபியல் 1)

இலக்கண விளக்கப்பாட்டியல் (கி.பி.17)

1. *கடுங்கொலை நீக்கிக் கடவுட் காப்புச்*
செங்கீரை தால்சப் பாணி முத்தம்
வாரானை முதல் வகுத்திடு மம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரென்னப்
பெறுமுறை யாண்பாற் பிள்ளைப் பாட்டே

2. *அவற்றுட்*
பின்னைய மூன்றும் பேதையர்க் காகா
வாடுங் கழங்கம் மானை யூசல்
பாடுங் கவியாற் பகுத்து வகுப்புட
னகவல் விருத்தத் தாற்கிளை யளவாம்

3. *மங்கலம் பொலியுஞ் செங்கண் மாலே*
சங்கு சக்கரந் தரித்த லானுங்
காவற் கடவு ளாத லானும்
பூவினட் புணர்த் லானுமுற் கூறிக்
கங்கையும் பிறையுங் கடுக்கையும் புனையுமை
பங்கனென் றிறைவனைப் பகர்ந்து முறையே
முழுதுல கீன்ற பழுதறு மிமயப்

பருப்பதச் செல்வியை விருப்புற வுரைத்து
நாமகள் கொழுநன் மாமுகி லூர்தி
யொற்றைக் கொம்பன் வெற்றி வேல
னெழுவர் மங்கைய ரிந்திரை வாணி
யுருத்திர ருக்கர் மருத்துவர் வசுக்கள்
பூப்புனை யூர்தியிற் பொலிவோ ரனைவருங்
காப்ப தாகக் காப்புக் கூறல்.

4. மூன்று முதல்மூ வேழு திங்களி
னொற்றை பெற்ற முற்றறு மதியின்
கொள்ளுக பிள்ளைக் கவியைக் கூர்ந்தே.

5. மூன்றைந் தேழா மாண்டினு மாகும்

6. ஒன்பது பதினொன்று என்பது காப்பே

(434-439)

தொன்னூல் விளக்கம் (கி.பி.18)

1. பிள்ளைக் கவியின் பெற்றியைக் கூறச்
சுற்ற வகுப்பொடு தெய்வம் கொலைகாப்ப
ஒற்றைப படமூன் றுஆதி மூஏழு
ஈறுஆய் மதியினும் ஐந்துஏழு ஆண்டினும்
காப்புச் செங்கீரை தால் சப்பாணி
முத்தம் வாரானை அம்புலி சிறுபறை
சிற்றில் சிறுதேர் ஆடவர்க்கே கடை
மூன்றுஒழித்து அரிவையர்க்குஆம் கழங்கு அம்மானை
பத்து உறுப்பாய் ஒவ்வொன்றும் விருத்தம்
பப்பத் தாகப் பாடல் என்ப.

(257)

பிரபந்த தீபிகை (கி.பி.18)

....

செப்பு பிள்ளைக் கவிக்கு
மாதம் இருதிங்களில் காப்பு, ஐந்து, செங்கீரை
மாதம் ஏழில் தாலமாம்

வரைநலம் சப்பாணி முத்தமோ பன்னொன்று,
வாரானை சம்வற்சரம்
இது ஒன்றரை வருடம் இந்துஇரண்டினில் சிற்றில்
ஒலிபறை முழக்கல் மூன்றில்
ஊர்இரதம் நாலில் ஆண்பால், கழங்கு அம்மானை
ஊசல் பெண்பாலதாமே.

(5.2-4)

பிரபந்ததீபம் (கி.பி.19)
பிள்ளைக்கவி

1. பிள்ளைக் கவியே காப்பு செங்கீரை
தாலம் சப்பாணி முத்தம் வாரானை
அம்புலி சிறுபறை சிற்றில் சிறுதேர்
ஆசிரிய விருத்தம் ஈரைந்தான் முறையே
ஆண்பாற்கு அறைவர் அன்றிப் பெண்பாற்குக்
கடைமூன்று ஒழித்துக் கழங்கு அம்மானை ஊசல்
என்பவை சுட்டி இயம்புவர் புலவர்.

முத்து வீரியம் (கி.பி.19)

1. தீதில் காப்பே செங்கீரை தாலே
சப்பாணி முத்தம் வாரானை யம்புலி
சிறுபறை சிற்றில் சிறுதே ரிவற்றை
முறையே அகவல் விருத்தத் தாலே
பப்பத் தாகப் பாடுவ தாண்பாற்
பிள்ளைக் கவியில் வுறுப்பினிற் கடைமூன்
றொழித்துக் கழங்கம் மனையூச லென்றிவை
கூட்டிமுற் கூறிய வானுரைப் பதுவே
பெண்பாற் பிள்ளைக்கவியெனப் படுமே.

சுவாமி நாதம் (கி.பி.19)

1. மொழிபொருளிற் காப்புமுதற் சிறுதேர்மட் டாண்பின்
மூன்றில்கழங்கு அம்மானைஊஞ் சல்பேணுங்கிளைச் சீர்வகுப்போடு
அழிவின்அக வலின் விருத்தந்து அறைதல்பிள்ளைக் காவியாம்

(167.1-2)

பிரபந்தத் திரட்டு (கி.பி.19)

1. சார்காப்புச் செங்கீரை தாலார்சப் பாணிமுத்தம்
வாரானை சோமன் மலிபறைதே - ரார்சிற்றிற்
பேர்நரர்க்கு மின்னார்க்குப் பேசுநீ ராடலுடன்
சேர்கழங்கூ சற்பின்முன் செப்பு.

2. இரண்டைந்தே ழொன்பண் ணியல்பதினொன் றார்பன்
னிரண்டுபதி னெட்டிருபா னாலு - விரும்புமுப்பா
னாறுநாற் பானெட்டா மாணுக்கு மேலிரண்டான்
பேறுமின் னார்க்கு மதியே.

3. கூறுகாற் றெய்வக் கொலையகற்றிக் காக்கவெனக்
கூறுதுட்ட தெய்வத்தைக் கூறாதே - மாறாமல்
ஏற்று விருத்தப்பா விற்புணர்த்தி பாடகலச்
சாற்றுகின்ற பிள்ளைத் தமிழ்.

(திரட்டியல் 3, 4, 5)

4. ஆனைமுகன் மான்மதன னாறுமுகன் சேற்கொடியோன்
மோனசிவென் வீரனயன் முத்தனய்யன் - மோனசிவென்
மான்மாதர் காளிகலை மான்றருமி - வாணிவீரி
யானிபொண்ணான் பிள்ளைப்பாக் காம்

(புறநடையில் 89)

5. இருகையை யூன்றி யொருதா ளெடுத்துத்
திருமுகமாட் டும்பருவத் திங்கள் - வரவழைத்தல்
சாமமுதற் சொற்றன முப்பாமூ - வர்ச்சாற்ற
லாம்பிள்ளைப் பாக்கருவறி.

(கருப்பொருளியல் 105)

செய்யுள் வகைமை

1. ஈரெண் கலையினும் இயன்ற வண்ணமும்
ஆசிரிய விருத்தமு மாதி யானவிச்
சுற்றத் தளவாய்த் தோன்றும் பாட்டுச்
சொற்றரப் பெறினைம் பானிற் சுருங்காது
சிற்றில் சிறுபறை சிறுதே ருருட்டல்
மற்ற மூன்றும் மிகாது நிற்கும்

2. ஏனைய வரையறை யைம்பது திருந்தி
வருத லாகா தென்பது புலவர்
எடுத்துரை யாகும்.

பரணர் பாட்டியல்

1. காப்பு முதலெடுக்குங் கடவு ளானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தன னாகும்

2. கொச்சகக் கலியும் கலிவெண் பாட்டும்
எச்ச மிபிவே எவ்வாய் மருங்கினும்.

தாள் சுவடி நகல்



தாள் சுவடி நகல்